# சத்திய வேத பாதுகாவலன்

Telegram : "CATHOLIC PRESS", JAFFNA. 1876-ம் வருஷம் ஆரம்பிக்கப்பட்டது. Telephone : No. 390

REGISTERED AT THE CEYLON G. P. O. AS A NEWSPAPER.

"கர்த்தர் நகரத்தைக் காக்காவிட்டால் அதைக் காக்கிறவன் கண்விழிப்பது வியர்த்தம்"

86-ம் புத்தகம் | யாழ்ப்பாணம் 1961-ம் ஆண்டு பங்குனிமாதம் 25-ந் திகதி சனிக்கிழமை — பிரதிசதம் 12 | 12-ம் இலக்கம்


# சிலுவையிலே மகிமை பாராட்டுவோமாக!




"நாங்களோ எங்கள் ஆண்டவராகிய யேசுக்கிறிஸ்துவின் சிலுவையிலே மகிமை பாராட்டவேண்டும். ஏனெனில், அவரிலேயே எங்களுக்கு இரட்சணியமும், சீவியமும், உத்தானமும் உண்டு. அவராலேயே நாங்கள் இரட்சிக்கப்பட்டு விடுதலையடைந்தோம்." இவ்வாறு திருச்சபை பரிசுத்தவாரத்தில் கிறிஸ்துநாதருடைய சிலுவைமரணத்தின் முக்கியத்துவத்தை ஞாபகப்படுத்துகின்றது.

கிறிஸ்துநாதருடைய சிலுவை மரணம் எமது திருமறையின் நடு நாயகம் என்பதில் எவ்வித ஐயமுமில்லை. ஆதிமனிதன் கட்டிக்கொண்ட பாவத்திற்குச் சிலுவை மரத்தின் மூலமாகவே தகுந்த பரிகாரம் செலுத்தப்பட வேண்டுமென்று தேவன் சித்தம் கொண்டார். "தேவரீர் மனுக்குலத்தின் இரட்சணியத்தைச் சிலுவைமரத்தில் வைத்தருளினீர். அதேதெனில், எதிலிருந்து மரணம் உண்டானதோ (மரத்தில்) அதிலிருந்தே சீவியமும் உதிக்கவேண்டுமென்றும், மரத்தினால் செயம் கொண்டவன் (பசாசு) மரத்தினாலேயே செயிக்கப்படவேண்டுமென்றும் தேவரீர் சித்தமானீர்" என்று திருப்பாடுகளின் முகவுரையில் திருச்சபை பாடுகின்றது. உலகத்தை உய்யப்பண்ணியது சிலுவையே. யேசுபெருமான் தம்முடைய சிலுவைமரணத்தினால் உலகத்தின் அக்கிரமங்களுக்குத் தகுந்த பரிகாரம் செலுத்தினார். "நாம் பாவங்களுக்கு மரித்தவர்களாய் நீதிக்குச் சீவிக்கும்படி அவர்தாமே சிலுவை மரத்தின்மேல் தமது சரீரத்தில் நமது பாவங்களைச் சுமந்தார். அவருடைய காயங்களினால் சொஸ்தமாக்கப்பட்டோம்" (1 இரா. 2 : 24).

கிறிஸ்துநாதர் தமது பாடுகளினாலும், மரணத்தினாலும் பாவத்

(தொடர்ச்சி 8-ம் பக்கம்)

## பரிசுத்தவாரச் சிந்தனைக்கு ஏற்ற திருப்பாடுகளின் நிகழ்ச்சிநிரல்

இந்த நிகழ்ச்சிநிரலை இப் பரிசுத்தவாரத்தில் அடிக்கடி வாசித்துச் சிந்திக்குமாறு பொதுவாக எல்லாக் கத்தோலிக்கரையும், விசேஷமாகத் தமது இல்லத்துக்கு வெளியேசென்று பரிசுத்தவார நிகழ்ச்சிகளில் பங்குபெறமுடியாதிருக்கும் விசுவாசிகளையும் தூண்டுகின்றோம்.

**பெரிய வியாழன் :**

பின்னேரம் 5—7 : யேசுநாதர் தமது மாதாவாகிய மரியம்மாளிடம் விடைபெற்று ஏகி, கடைசி இராப்போசனத்தை நடத்துகிறார்.

„ 8 மணி : யேசுநாதர் தமது அப்போஸ்தலரின் பாதங்களைக் கழுவியபின் தேவநற்கருணையாகிய தேவதிரவிய அனுமானத்தை ஏற்படுத்துகிறார்.

„ 9 மணி : கடைசி இராப்போசனத்தின்பின் ஒலிவேத் பூங்காவனத்துக்குப் போகிறார்.

„ 10 மணி : ஒலிவேத் பூங்காவனத்தில் யேசுநாதர் செபிக்கிறார்; தாங்கமுடியாத வேதனை அனுபவித்து, இரத்த வெயர்வை சிந்துகிறார்.

„ 11 மணி : பூங்காவனத்தில் யூதாஸ் யேசுநாதரைக் காட்டிக் கொடுக்கிறான்.

„ 12 மணி : யேசுநாதர் அன்னாசுக்கு முன்பாக இழுத்துச்செல்லப்படுகிறார். பின்னர் கைப்பாசுக்கு முன்பாக இட்டுச் செல்லப்பட்டுத் திருமுகத்தில் அடிக்கப்படுகிறார்.

**பெரிய வெள்ளி :**

காலை : 1 மணி : பேதுருவானவர் கிறிஸ்துநாதரை மும்முறை மறுதலிக்கிறார். சேவகர்கள் யேசுநாதரின் கண்விழிகளை மூடிக் கட்டி, அவரை அடித்துப் பரிகாசம்செய்கிறார்கள்.

„ 5 மணி : யேசுநாதர் நீதிச்சபைக்குக் கொண்டுசெல்லப்பட்டுக் கொலைத் தண்டனை விதிக்கப்படுகிறார்.

„ 6 மணி : பிலாத்தின்முன்பு யேசுநாதர்குற்றஞ்சாட்டப்படுகிறார்.

„ 7 மணி : யேசுநாதர் ஏரோதனால் பரிகசிக்கப்படுகிறார்.

„ 8 மணி : பறபாஸ் விடுதலைசெய்யப்படவும், யேசுநாதர்கோறணி வாதை செய்யப்படவும் விதிக்கப்படுகிறார்.

„ 9 மணி : யேசுநாதர் கற்றூணில் கட்டப்பட்டு அடிக்கப்படுகிறார்.

„ 10 மணி : யேசுநாதரின் திருச்சிரசில் முள்முடி சூட்டப்பட்டு "இதோ மனிதன்" என்று சனங்களுக்குக் காட்டப்படுகிறார்.

„ 11 மணி : யேசுநாதர் மரணத்தீர்வை இடப்பட்டபின் திருச் சிலுவையைச்சுமந்து கல்வாரிமலை உச்சிக்குச் செல்கிறார்.

„ 12 மணி : யேசுநாதரின் திருவஸ்திரங்களைக் களைந்து அவரைத் திருக்குரிசில் அறைகின்றார்கள்.

வெள்ளிமாலை 1 மணி : யேசுநாதர் தம்மை வதைக்கிறவர்களுக்காக மன்றாடுகிறார்.

„ 2 மணி : யேசுநாதர் தமது மாதாவை எமது தாயாராகத் தருகிறார்.

„ 3 மணி : யேசுநாதர் சிலுவையில் மரணிக்கிறார்.

„ 4 மணி : யேசுநாதரின் திருவிலாவைப் போர்ச் சேவகன் ஈட்டியால் குத்துகிறான்.

„ 5 மணி : யேசுநாதரின் திருச்சரீரம் சிலுவையில் இருந்து இறக்கப்பட்டு, அவரது தாயாரின் மடியில் வளர்த்தப்படுகிறது.

„ 6 மணி : யேசுநாதரின் திருச்சரீரம் கல்லறையில் அடக்கம் பண்ணப்படுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிறிஸ்துநாதருடைய சிலுவைமரணமும் எமது இன்றைய வாழ்க்கையும்

கிறிஸ்துநாதருடைய சிலுவைமரணம் எமதுமதத்தின் நடுநாயகம்; அது ஞானஅர்த்தம் நிறைந்ததுஎன்பதும் உண்மையே; அதை வழிபாட்டுப் பத்திமுயற்சிகளால் பூசிதப்படுத்துவதும் நன்று. எனினும், இவைஎல்லாம் அது சரித்திரத்தொடர்புள்ள நிகழ்ச்சி என்பதை மறைக்குமாகில், அதுஜெருசலேம்நகரவாசலுக்கெதிரே நிசன் மாத பதினன்காம்தேதியில்நடந்த சம்பவமென்பதை மறந்தால், எமது மதத்திற்கு வரவேண்டிய ஞான ஊக்கம் வராது. வேதப்பாடத்தில் நமதுஇரட்சகர் பாடுபட்டதேன்? என்றவினவிற்கு வேதசாஸ்திர மரபுக்கிணங்க மறுமொழிகாண்கிறோம். இதைவிட உண்மையானஉரை வேறொன்றுண்டு. யூதமதஅதிகாரிகளும், ரோமானியத் தேசாதிபதியுமடிய அரசியற்கூட்டத்தின்விளைவாய் இரட்சகர் இறந்துபட்டார் என்று கூறவதும் உண்மை.

## மதமும் அரசும் ஒத்துழைப்பு

யேசுநாதரின் மரணத்தின்போது கைப்பாசு தலைமைக்குருவாயிருந்தான். அவன் அப்பதவியை ரோமானியரின் தயவால் பெற்றிருந்தான். பிலாத்துவுக்கு முன்னிருந்த அதிகாரியால் நியமனம்பெற்றிருந்த அவன் பதவியைத் தொடர்ந்து பற்றிக்கொள்ள ரோமானியருடன் ஒத்துழைக்கவேண்டுமென்பதை நன்கறிந்திருந்தான். ஒத்துழைப்பென்றால், யூதமக்களுக்குச் சுதந்திர உணர்ச்சியை யூட்டும் எத்தீவிரவாதியையும்நசுக்க உதவிபுரிவதே. தீவிரவாதிகள்பலர் "அரசர்"என்ற பெயர் புனைந்து, கொள்ளைக்கூட்டங்களுக்குத் தலைமைதாங்கி, ரோமானியஆட்சிக்குப் பலகாலும் தொல்லைதந்தனர் என்று அக்காலச்சரித்திரம் சான்றுகூறுகின்றது.

தொல்லையும் தொந்தரவும் தந்தஇவர்கள் ரோமானியரால் நசுக்கப்படுவார்கள். யூதர்அனுபவித்த சொற்பசுதந்திரமும் பறிக்கப்படும்; யூதமதத்தலைவர்களுக்கிருந்தஆதிக்கம் அகற்றப்படவுங்கூடும். இத்தகையநிலையை மனதில் வைத்துத்தான், "முழுஇனமும் அழிவுறுமல்காப்பாற்ற, பொதுநன்மையின் பொருட்டு ஒருவன்மடிவது எமக்கு நலமாயிருக்கும்"எனக் கைப்பாஸ்கூறினன் என நாம்கருதவேண்டும். அதாவது, அரசியல்காரணங்களின் பொருட்டுக் கிறிஸ்துகொலைப்படுவது உசிதமாகக் காணப்பட்டது. கிறிஸ்துவைக் கொலைக்குத்தீர்ப்பிடத் தனக்கு அதிகாரம்இல்லைஎனக் கைப்பாஸ்அறிவான். அது ரோமானிய அதிபதிக்கே உரியது. ஆகவே, போஞ்சியு பிலாத்துஅதிகாரியிடம் கிறிஸ்துவைக்கையளிக்க உறுதிகொண்டிருந்தான்என முன் கூறிய வார்த்தைகள் நிரூபிக்கின்றன.

எனினும், இச்சதித்திட்டம் மறைவிலேயே நிறைவேற்றப்பட வேண்டும். திரைமறைவில் ரோமானியருடன் ஒத்துழைத்தாலும், ரோமானியரை மக்கள் அலட்சியம் செய்கிறார்கள்என்பது மறக்கற்பாலது. இரவோடிரவாய் விசாரணை நடத்தியது, தேவதூஷணம் எனக் குற்றஞ்சுமத்தியது, மறுநாள் விடியுமுன்னமே பிலாத்துவிடம் அவரைத் தீர்வைக்குக் கொண்டுபோனது இவை எல்லாம் பொதுமக்கள் விடயத்தைச் சிந்திக்கச் சந்தர்ப்பம்கொடாமல் சதித்திட்டத்தை நிறைவேற்றவேண்டுமென்ற இராசதந்திரமேயன்றி வேறென்ன?

## திட்டத்திற்கேற்ற சட்டம்

சநிகாரனன பறபாசும், மற்ற இருகள்வரும் அந்தவெள்ளிக்கிழமை மரணதண்டனை பெறவேண்டுமென்று நிச்சயித்திருந்ததால், ஆண்டவரையுங்கூட அவர்களுடன் சேர்த்துவிடலாம்; ஏனென்றுகேட்க எவரும் இருக்கமாட்டார்களென யூதத்தலைவர்கள் எண்ணினர்போலும். ஆண்டவர் அபபோஸ்தலரன்றி வேறுதவி இல்லாதிருக்கும் இடத்திற்குச் சேவுகரை அழைத்துச் செல்ல யூதாஸ் முன்வந்தபொழுது தமதுதிட்டம் இனிதே கைகூடுகின்றது என எண்ணியிருப்பர் யூதத்தலைவர்கள்.

திட்டமிருந்தாலும் சட்டத்திற்கு இணங்கவேண்டுமே! அரசியற்புரட்சி என்றசாட்டு ரோமானியருக்குத் திருப்தியளிக்கும்என்றாலும் யூதத்தலைவர்களுக்கு இன்னொன்றும்தேவை. "சிரஞ்சீவியான கடவுளின் மேல் ஆணையாகக் கேட்கிறேன்; நீ தேவகுமாரனாகிய கிறிஸ்துவோ என்று கூறு ........ தேவதூஷணம் சொன்னான். சாட்சிகள் நமக்கு எதற்கு? அவன்கூறிய தேவதூஷணத்தை நீங்களே கேட்டீர்களே" யூதமதச் சட்டப்படி மரணதண்டனைக்குரிய குற்றம் கண்டாயிற்று. ஆனால், இது பிலாத்துவுக்குத் திருப்திதருமா? ஆகவேதான், புரட்சிக்குற்றம் சுமத்தப்பட்டது.

இக்குற்றத்துக்குரிய சான்றுகள் அதிபதி பிலாத்துவுக்குத் திருப்தியளிக்கவில்லை. குற்றச்சாட்டைப் பிலாத்துஏற்று, சாதகமாகத் தீர்ப்பளிப்பான், விரித்து விசாரணை செய்யமாட்டானென எண்ணிய யூதத் தலைவர்கள் ஏமாந்தனர். கிறிஸ்துவைக் கண்டதும் அவர் புரட்சிக்காரனல்ல எனப் பிலாத்து துணிந்துகொண்டானாயினும், யூதத்தலைவர்கள் அவனைமடக்கி உட்படுத்திய சங்கடமான நிலைமையிலிருந்து தப்பவழிகண்டானில்லை. யூதமதக் கோட்பாடுகளுக்கு முன் மதிப்பளிக்காதுவிட்டு யூதரின்விரோதத்தைத் தேடிக்கொண்டதுபோல இப்பொழுதும் தேடவிரும்பவில்லை "நீர் இவனை விடுதலைசெய்தால் சேசாரின் நண்பன் அல்ல"என்ற கூக்குரலைக் கேட்டான். தன் பதவியை இழக்கத் துணிந்தானில்லை. பதவிக்காக நீதியைப்பலியிட்டுக் கிறிஸ்துவுக்குக் கொலைத்தீர்ப்பளித்தான்.

## கிறிஸ்துநாதரும் நாமும்

அரசியல், சமயப் பின்னல்களின் சிக்கலாலேயே ஆண்டவரின் மரணம் ஏற்பட்டது என்பதை நாம் விளங்கிக்கொண்டால் எமக்குப் பெரிதும் உதவும். முதலாவதாக எமது இரட்சகர் தமது வாழ்க்கையை மக்களின் வாழ்க்கையுடன் இணைவுபடுத்துகிறார். அவர் தேவனுனதினிமித்தம் வாழ்க்கையின் சகல நிகழ்ச்சிகளையும் தமது ஆணைக்குள் வைத்திருந்தாலும், மனிதன் என்ற முறையில் அன்றாட நிகழ்ச்சிகளின் விளைவுக்குத் தம்மைக் கையளித்தார்.

சந்தர்ப்பங்களுக்கேற்பக் களைப்பும், ஓய்வும், மகிழ்ச்சியும், அச்சமும் அடைந்தார். "பன்னிரண்டு கூட்டம் அமரசணங்களின் உதவியைத் தேட வலிமை இருந்தும்" காவல் இன்றிக் கயவாகையில் தம்மைக் கையளித்தார். தேவகுமாரன் உண்மையான மனுச்சுபாவத்துடன் தோன்றவேண்டுமென்பதே திரிஏககடவுளின் திருச்சித்தம். அதாவது, திருமகன் மானிட சுபாவத்தில் எமது மானிட வாழ்க்கையைச் சாரும சுகதுக்கங்களை அனுபவிக்க வேண்டுமென்பதையன்றி வேறென்ன? போதகரும், தீர்க்கதரிசியும், சீர்திருத்தவாதியும், தச்சுத்தொழிலாளருமான அவர் மானிட வாழ்க்கையை நடாத்துவது எப்படியெனக் காட்டினர்.

## வாழ்க்கையும் மதமும்

மானிட வாழ்க்கையின் நிலையைக் கிரகித்துக்கொண்டாற்றான் தேவனின் மனித அவதாரத்தையும், அவர் நிறைவேற்றின ஈடேற்றத்தையும் நாம் நன்கு விளங்கிக்கொள்ளலாம். அப்பொழுதுதான் எமதுமதம் எமது வாழ்க்கையில் செறிந்திருக்கவேண்டியது எப்படிஎன விளங்கிக்கொள்ளலாம். கிறீஸ்துவுக்கு அவரது நாளாந்த வாழ்க்கையும், பிதாவுக்குச் செய்யும் சேவையும் ஒன்றாகி இருந்தன. அஃதேபோல் எமது மதமும, வாழ்வும் ஒன்றாகவேண்டும். அதாவது, எமது குடும்பத் தொடர்பு, உழைப்பு, அரசியல – சமூக வாழ்வு என்ற அமைப்பிற்குள் தேவ நியமனத்தை நாம் நிறைவேற்றவேண்டி இருக்கிறது.

## கல்வாரி இன்னும் முடியவில்லை

அன்றியும், திருச்சபையின் உறுப்பினராகிய நாம் கிறீஸ்துவின் ஞான உடலுக்குச் சேர்ந்தவர்கள். எனவே, திருச்சபையின் வளர்ச்சியும், அனுபவங்களும் கிறீஸ்துநாதருடைய வாழ்க்கையின பிரதிபிம்பங்களாகின்றன. கிறீஸ்துவின் சரிதமும், கிறீஸ்தவருடைய தற்காலச்சரிதமும் பூரணமாய்ப்பொருந்துவதைக்காணுகிறோம். முன்னைய சரித்திரமும், இன்றைய நிகழ்ச்சிகளும் ஒரேதன்மையானவை. மனிதனும், அவனுடைய ஆசைகளும், மனக்கோட்டைகளும், பெலவீனமும் எப்போதும் ஒரே தன்மையானவை. ரோமை இராச்சியமும், சோவியற் ருஷிய ஆட்சியும் வெவ்வேறானவை. திபேரியுஸ் சக்கரவர்த்தியும், ஸ்ராலினும் வேறானவர்கள். எனினும், இருபேர்களது ஆசைகள் ஒருதன்மையானவை. முற்காலப் பலஸ்தீனாவிலும், தற்கால ஹங்கேரியிலும் உள்ள அரசியல், பொருளாதார நிலைகள் வெவ்வேறானவை. எனினும், கிறீஸ்துவும் கருதினால் மின்ட்சென்ரியும் ஒரே தன்மையாகவே நடத்தப்பட்டனர். உண்மைக்குமாறான குற்றச்சாட்டுகள், அரசியற் சதி செய்ததாகக் கூற்று, மரணத்தீர்ப்புச் செய்துவிட்டு அதற்குச் சட்டஆதாரம தேடினமை யாவும் பொருத்தம்பெறுகின்றன. கல்வாரியின் சோகநாடகம் முடிந்துவிடவில்லை கிறீஸ்துவின் உறுப்புக்கள் என்றும் அச்சோக நிகழ்ச்சியின் பாத்திரங்களாய் இருக்கின்றன என்று உணருவோமேயாகில் அவர்மாட்டு எமது பிரமாணிக்கம் புத்துயிர்பெற்று வலுவடையும்.

## ஈடேற்ற வழி

ஒரு கிறீஸ்தவன் அரசியலில் விரும்பிய எச்சார்பும் கொள்ளலாம் எனினும், கட்சிப்பற்று கிறீஸ்தவகொள்கைகளைச் சிலவேளை மறைக்கின்றன என்பது வெளிப்படை. சமூகப்பிளவு, அறிவுக்கர்வம், சுயநலம் யாவும் அரசியல் கருத்தாகி எமது ஒழுக்கத்தையும், யோக்கியத்தையும் இலகுவில்குலைத்துவிடுகின்றன. "சேசாருக்குரியதைச் சேசாருக்கும், இறைவனுக்குரியதை இறைவனுக்கும்" கொடு என்னும் கட்டளை அரசியலைக் கைவிடும்படியல்ல, அரசியல் நோக்கத்தைச் சரியாக்கும்படி கற்பிக்கிறது. "எமக்குச் சேசார் அன்றி வேறு அரசனில்லை" எனக்கூறி யூதமக்கள் தமது உண்மை அரசனை விட்டு, ஒரு விரோதியை அரசனாக ஏற்றனர். இவைகளிலிருந்து நாம் ஊகிக்கவேண்டியதென்ன? மக்களுக்கு ஈடேற்றம் அரசியல்வலிமையினால் ஆவதொன்றுஅல்ல. பரமனின் அருளினாலேயாகும். எனினும், மனித சித்தத்தை — சம்மதத்தை ஒட்டியே தேவஅருள் எம்மை ஈடேற்றும். தெய்வ வலிமையும், மனிதநலிமையும் சேர்ந்தே ஈடேற்றத்துக்கு வழியாகும். கடவுள் தமது நோக்கங்களை நிறைவுபடுத்த மனிதர் கருவியாகவேண்டும்.

குற்றமற்றகிறிஸ்துவே உலகின்ஈடேற்றம். அதாவது, யூதத்தலைவர்களின் நேர்மைக்குறைவுக்கும், ரோமை அதிபதியின் அநீதிக்கும் அஞ்சாமல் எதிர்த்துத் தமது நேர்மையினால் உண்மைக்குச் சான்றுகூறினார் கிறீஸ்து. நேர்மையையும், உண்மையையுங் கைவிட்டு அநீதியுடனும், அக்கிரமத்துடனும் இணங்கிப்போக மறுத்ததினால் மரணத்திற்குள்ளானார். இணங்கியிருந்தால் மரணமுமில்லை; ஈடேற்றமும் இல்லை. கிறீஸ்துவின் தொண்டு தொடர்ந்து நடக்கவேண்டுமாகில் அவர்காத்துத் தந்த உண்மைகளை நாமும் காப்பாற்றவேண்டும். மதிப்பிழக்கும் நாணயம் போன்றதல்ல உண்மை. அது இறைவன் எம்மிடம்ஒப்படைத்த பொறுப்பு. "நான் பிறந்ததும், உலகில் வாழ்ந்ததும் உண்மைக்குச் சாட்சியாகவே; உண்மையை நாடுகிறவன் என் பேச்சைக் கேட்பான்." அநீதியும், அக்கிரமமும் உலகில் தலையெடுத்த போதிலும் கிறீஸ்து கைக்கொண்ட நேர்மையும், யோக்கியமும் வாழ்க்கையில் எம்முடையதாக வேண்டும்.

---


## கோட்டு விற்பனவு விளம்பரம்

இல M. B. 3408

வட்டுக்கோட்டை கிழக்கு
மாரிமுத்தர் ஆறுமுகம் நாராயணசாமி
— வழக்காளி.
எதிராக
வட்டுக்கோட்டை கிழக்கு
அப்புத்துரை பொன்னுத்துரை
— எதிராளி.

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் M. B. 3408-ம் இலக்கவழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி, பின்னால் விபரிக்கப்படும் ஒருதுண்டுக் காணி 1961-ம்ஆ சித்திரைமீ 12-ம்வ புதன் கிழமை பிற்பகல் 4மணிதொடக்கம் அந்தக் காணிக்குள்நின்று பிரசித்த வலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை: முதல் வட்டி ரூபா 1,511-ம், இதற்குத் தீர்வைத் தொகை ரூபா 1,000-க்கு 3-6-60 திகதி தொடக்கம், 9-8-60வரைக்கும் 100-க்கு 8 வீதவட்டியும், பின் முழுத்தொகையும் இறுபடும்வரைக்கும் 5வீத வட்டியும், கோட்டுச்செலவு ரூபா 187-27 சதம்.

### காணி விபரம்

வடமாகாணம், யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வலிகாமம் மேற்கு, வட்டுக்கோட்டை கோயிற்பற்று, வட்டுக்கோட்டை கிழக்கு "பெரியபுலம்" பரப்பு நெல்அலாச்சம் 10½. இதற்கு எல்லை: கிழக்கு—இளையதபி கைம்பெண் சிவகாமிப்பிள்ளைக்குரிய ஆதனம். வடக்கு—பிள்ளையார்கோயில் ஆதனமும், சுப்பையா கைம்பெண் பார்வதிப்பிள்ளையின் ஆதனமும் மேற்கு—சின்னத்தம்பி சுப்பிரமணியத்தின் உரித்தாளருக்குரிய ஆதனம். தெற்கு—சுப்பிரமணியர் சரவணமுத்துவுக்குரிய ஆதனம். இது அடங்கலும்.

சி. செ. மாரிமுத்து,
கொமிஷனரும், விலைமதிப்பாளரும்
விதானைவளவு, சித்தன்கேணி,
4-3-61.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சென் வின்சென்ற் டீபோல் தருமசபை

யாழ்ப்பாணம், சென் வின்சென்ற்டீ போல் தருமசபை, சீர்ச். சூசையப்பர்பந்தியின் வருடாந்தபொதுக்கூட்டம் இம்மாதம்26-ந்திகதியாகிய வருகிற ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 5-30 மணிக்கு ஆசனக்கோவிலின் பக்கமாகவுள்ள டி மொண்பேர்த் மண்டபத்தில் நடந்தேறும். ஆசனக்கோவில் பங்குக்குரவர் வண. எல். ஜே. அகஸ்ரீன் சுவாமியவர்கள் தலைமைவகிக்கவிருக்கின்றார். பந்தியின் ஆதரவாளர்களும், அபிமானிகளும் சமுகந்தருமாறு அன்பாகவேண்டப்படுகின்றார்கள்.

## சத்தியாக்கிரகத்தின் 2-ம் மாதம் ஆரம்பம்

தமிழ்ப்பேசும் மக்கள் தங்கள் மொழி உரிமைக்காக சத்தியாக்கிரக போராட்டம் ஆரம்பித்து இப்போது ஒருமாதத்திற்கு மேலாகிவிட்டது. இரண்டாம் மாத ஆரம்பதினமாகிய 20-ந்தேதி அன்று சத்தியாக்கிரக இயக்கம் மட்டக்களப்பில் எல்லா அரசாங்க காரியாலயங்களுக்கும் விஸ்தரிக்கப்பட்டுள்ளது. யாழ்ப்பாணத்தில் ஆலயமணி ஆர்ப்பரிப்புக்களுடன் விசேஷவேண்டுதல்கள் நடைபெற்றன. மன்னாரிலேயும் புதிதாக ஆரம்பிக்கப்பட்டுள்ளது. வவுனியாவிலும் சத்தியாக்கிரகம் விரைவில் ஆரம்பிக்கப்படுமென்று அறிவிக்கப்பட்டுள்ளது.

## மன்னாரிலும் சத்தியாக்கிரகம் ஆரம்பம்

சென்ற திங்கட்கிழமை 20-ந்திகதி காலை 1000-க்கு மேற்பட்ட தொண்டர்கள் மன்னார்க் கச்சேரியை முற்றுகையிட்டு மறியல் இயக்கத்தை ஆரம்பித்துள்ளனர். இவ்வியக்கத்துக்கு மன்னார் பாராளுமன்ற பிரதிநிதி திரு. வி. ஏ. அழகக்கோன் அவர்கள் தலைமை தாங்குகின்றார். டக்றர் ஈ. எம். வி. நாகநாதன் (நல்லூர் எம். பி.) சேர்க்கதையா வைத்தியநாதன் ஆகியோரும் சத்தியாக்கிரக இயக்கத்தில்கலந்துகொள்கின்றனர்.

## பிரதமருக்குத் தமிழ்பேசும் மாதரின் மகஜர்

பொத்துவில், நிந்தாவூர், கல்முனை, பட்டிருப்பு, கல்குடா, மட்டக்களப்பு ஆகியதொகுதிகளைச் சேர்ந்த 7,000 தமிழ், முஸ்லிம் மாதர்கள் பிரதமர் அவர்களுக்கு ஓர் மகஜர் அனுப்பியுள்ளனர். "அதில்" சாம்ராஜ்ய பிரதமர்கள் மகாநாட்டில் தென்னாபிரிக்காவில் நடைபெற்றுவரும் இனத்துவேஷத்தை வலிமையாகக் கண்டித்த நீங்கள் தமிழ்ப்பேசும் மக்களாகிய எங்களுடைய போராட்டத்தைப்பற்றி மற்றவர்கள் தரும்தகவல்களைக்கேட்டு நம்பியிருக்காமல், மட்டக்களப்புக்கு நேரில் விஜயம்செய்து எல்லாவற்றையும் நேரில்அறிந்து பிரச்சனையை நீதியுடன் தீர்த்து வைக்குமாறு வேண்டுகின்றோம்" என்று குறித்துள்ளனர்.

## தாய்மொழிப் போராட்டத்தைப் பார்த்துக்கொண்டிருக்க முடியாது

எமதுமொழி, கலாச்சாரம் ஆகியவற்றின் அந்தஸ்து பெருமை முதலியவற்றிற்கான போராட்டம் தொடங்கிவிட்டது. தோட்டத் தொழிலாளர்கள் 24மணிநேர அறிவித்தலுடன் இந்தப் போராட்டத்தில் குதிக்க தயாராயிருக்க வேண்டும். நமது தாய்மொழியின் உரிமைக்காக வடக்கிலும் கிழக்கிலும் உள்ள எமது சகோதரர்கள் தீவிரமான போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். இதனை நாம் தூரநின்று பார்த்துக் கொண்டிருக்க முடியாது". இவ்வாறு இலங்கைத் தொழிலாளர் காங்கிரசின் நுவரெலியா மாவட்டத்தலைவர் திரு. ஆர். சுப்பிரமணியம் அங்கு பேச்சுக்கையில் குறிப்பிட்டார்.

## பாடசாலைச் சொத்துக்கள் சுவீகரிக்கப்படுகின்றன

அண்மையில் வித்தியாதிபதியின் அதிகாரத்தின்கீழ் கொண்டுவரப்பட்ட உதவி நன்கொடைபெறும் 243 பாடசாலைகளுள் 1-ம், 2-ம், 3-ம்தர ஆங்கில பாடசாலைகளின் சொத்துக்களை அரசாங்கம் சுவீகரித்துக்கொள்ளப் போவதாகச் சென்றவாரம் கல்வி அமைச்சர் கட்டளை பிறப்பித்துள்ளார். இப்பாடசாலைகளுள் அநேகம் கத்தோலிக்கப் பாடசாலைகளாகும். ஏனையபாடசாலைகளின் சொத்துக்களுக்கும் இத்தகைய உத்தரவு விரைவில் பிறப்பிக்கப்படுமென்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

## வெளிமாணவருக்குப் பட்டமளிப்பு

வெளிமாணவருக்குப் பட்டமளிக்க இலங்கைப்பல்கலைக் கழகத்துக்கு அதிகாரமளிக்கும் மசோதா பாராளுமன்றத்தில் சென்றவாரம் நிறைவேற்றப்பட்டது. இது இந்தவருடத்திலேயே அமுலுக்குவருமென எதிர்பார்க்கப்படுகின்றது. இத்திட்டத்தினால் பல்கலைக் கழகத்துக்குச் செல்லவசதியற்ற மாணவர்களும், சிறப்பாகப் பள்ளிகளிற் கல்விகற்பிக்கும் ஆசிரியர்களும் பயனடைவார்களென்பது திண்ணம்.

## சுதேச விஸ்கி-பிறண்டி

நீர்கொழும்பைச்சேர்ந்த ஒருகூட்டுறவுச்சங்கப்பரிசோதகரான திரு. ஜே. பி. வி. பெர்னாண்டோ மதுபரிபாலன பகுதியின் அனுமதியோடு அதேபகுதி அதிகாரிகளின் மேற்பார்வையிலே இலங்கைச் சாராயத்திலிருந்து ஒரு கலன்விஸ்கி தயாரித்து அதிகாரிகளின் பரிசோதனைக்குச் சமர்ப்பித்திருக்கின்றார். இறக்குமதியாகும பிறநாட்டு விஸ்கி, பிறண்டிக்குச் சமமான சுதேச விஸ்கி, பிறண்டியை இருபதுரூபாவுக்குக் குறைந்தவிலையில் தயாரிக்கமுடியுமென இவர்கூறுகின்றார்.

## இறக்குமதி வரியேற்ற விலக்கு

இலங்கைப் போக்குவரத்துச் சபைக்குத் தேவைப்படும் மோட்டார் உபகரணங்களுக்கும், சகலகமத் தொழில் தளபாடங்களுக்கும், மற்றும் சில புடைவைஇனங்களுக்கும் சென்ற தைமாதம் அரசாங்கம்ஏற்றிய இறக்குமதிவரிகளை அகற்றிவிட ஆயத்தப்படுகின்றது. இந்தவரியேற்றங்கள் நீக்கப்படுமானால் ஏற்றியவரிகளிலிருந்து எதிர்பார்க்கப்பட்ட வருமானத்தில் அரசாங்கத்துக்குச் சுமார்75லட்சம் ரூபா நட்டம்ஏற்படும்.

# உள்நாட்டுச் செய்திகள்

## அரசாங்க ஊழியரின் திடீர்மாற்றம்

யாழ்ப்பாணக் கச்சேரியில் கடமையாற்றும் தமிழ் அரசாங்கஊழியர்களைக் கட்டாயமாகப்பிறவிடங்களுக்கு இடமாற்றஞ் செய்யவேண்டுமென்ற கருத்து இப்போது நின்றுவிட்டது. ஆனால், கச்சேரியைச்சேர்ந்த பத்துத் தமிழ் ஊழியர்கள் இரண்டுநாள் முன்னறிவித்தல்கொடுத்து வடக்கு-கிழக்கு மாகாணங்கள்தவிர்ந்த ஏனையபகுதிகளுக்குத் திடீர் இடமாற்றம் செய்யப்பட்டிருக்கின்றனர்.

## அடுத்துவரும் உபதேர்தல்கள்

இரத்கமை, குருநாகல், மாத்தளையாகிய மூன்றுதொகுதிகளிலும் இம்மாதம் 29-ந்திகதியாகிய வருகிற புதன் கிழமையன்று நடந்தேறவிருக்கும் மூன்று உபதேர்தல்களுக்குமான தேர்தல்பிரசாரங்கள் வேகமாக நடைபெறத்தொடங்கியிருக்கின்றன. மூன்று தொகுதிகளிலும் ஐக்கியதேசியக் கட்சிக்கும, ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சிக்குமிடையில்தான் போட்டாபோட்டியாகப் பிரசாரங்கள் நடைபெறுகின்றன. இன்று பிரதமர்சிறிமா இலங்கை திருபண்டாரநாயக்க முத்தொகுதிகளிலும் பிரசாரக்கூட்டங்களில் பேசவிருக்கின்றார். தேர்தல்முடிவுகள் அன்றிரவு தானே அறிவிக்கப்படும்.

## சத்தியாக்கிரகமும் புதிய நிர்வாகமும்

சத்தியாக்கிரக இயக்கத்துடன் சம்பந்தப்பட்ட சகலவிஷயங்களிலும் வடக்கு—கிழக்கு மாகாணங்களைப் பாதுகாப்பு—வெளிநாட்டு விவகார மந்திரிகாரியாலயமே நிர்வகிக்கவேண்டுமென அரசாங்கம் தீர்மானித்திருக்கிறது. சத்தியாக்கிரகஇயக்கத்தினால் எழுகின்ற சகலஉத்தரவுகளையும் நிறைவேற்றிவைக்க அரசாங்கஅதிபர்களுக்குப் பாதுகாப்பு—வெளிவிவகார மந்திரிகாரியாலயமே உத்தரவுகளைப் பிறப்பிக்கும் அதிகாரத்தைக்கொண்டிருக்கும். ஆயினும் ஏனையமந்திரிகாரியாலயங்களுடன் கலந்துஆலோசித்தே இதுசெயலாற்றும். "சத்தியாக்கிரகஇயக்கம் நடைபெறுகின்ற சகலபகுதிகளிலும் பங்கீட்டரிசி வழங்குவது நடைபெறவேண்டும்" என்று அரசாங்கஅதிபர்களுக்கு மந்திரிசபை அறிவித்துள்ளது.

## பென்ஷன் வழங்குவது தாமதம்

இளைப்பாறும் வயது காரணமாக அனுப்பப்படும் பென்ஷன்மனுக்களைத் தாமதஞ்செய்வதற்குப் பொறுப்பாயுள்ள உத்தியோகஸ்தரிலே நடவடிக்கை எடுக்குமாறு திறைசேரிக் காரியதரிசி நிரந்தரக்காரிய தரிசிகளையும், அரசாங்கபகுதிகளின் அதிபர்களையும் கேட்டிருக்கின்றார். அநேக அரசாங்க பகுதிகள் முழுவிபரங்களையும்கொண்ட பென்ஷன் மனுக்களை உரியகாலத்தில் திறைசேரிக்கு அனுப்பிவையாத காரணமாகப் பென்ஷன் வழங்குவதில் தாமதம் ஏற்படுவதாகத் திறைசேரியின் உதவிக்காரியதரிசி அறிவித்திருக்கின்றார்.

## தமிழ்ப்பல்கலைக்கழக வேலைகள் ஆரம்பிக்கப்படும்

தமிழ்ப்பல்கலைக்கழகத்துக்கு நிதி உதவியும், அங்கீகாரமும் அரசாங்கத்திடமிருந்து கிடையாதென்ற முடிவுக்குத் தமிழ்ப்பல்கலைக்கழக இயக்கத்தினர் இப்பொழுது வந்துள்ளனர். ஆயினும் தமது திட்டப்படி இவ்வருடமத்தியில் திரிகோணமலையில், தமிழ்ப் பல்கலைக்கழகக்கட்டிட வேலைகள் ஆரம்பிக்கப்படுமென்று மேற்படி இயக்கத்தின்தலைவர் பேராசிரியர் ஏ. டபிள்யூ. மயில்வாகனம் கூறியுள்ளார்.

## அரசாங்கஅதிபர் இல்லத்திற்குச்செல்ல மறுப்பு

யாழ்ப்பாண வட்டாரத்தைச்சேர்ந்த சகல கூட்டுறவு ஐக்கியசங்கங்களும, அதிகாரம்பெற்ற அரிசிவிநியோகஸ்தர்களும் பங்கீட்டரிசிபெற அரசாங்க அதிபரின் இல்லத்திற்குச் செல்ல மறுத்துவிட்டனர். சத்தியாக்கிரகம் கச்சேரிக்குமுன் தொடர்ந்து நடப்பதே இதற்குக் காரணமாகும்.

## கடற்றொழிற்பகுதி ஆலோசனைச்சபை

மீன்பிடிதொழிற்பகுதி ஆலோசனைச்சபையிலே உத்தியோகப்பற்றற்ற ஒருஅங்கத்தவராக யாழ்ப்பாணம், குருநகரைச்சேர்ந்த திரு. ஆரோக்கியம் யோசெவ் நியமனஞ்செய்யப் பெற்றுள்ளார். இவர் 1963-ம்ஆண்டு மார்கழிவரை அச்சபையிலே அங்கத்துவம் வகித்திருப்பாரெனத் தெரியவருகிறது.

## பரிசுத்தவாரம் வானொலி நிகழ்ச்சி

31–3–61 பெரிய வெள்ளிக்கிழமை காலை 8–30 மணி தொடங்கி 9–30 மணிவரை வானொலி தேசிய ஒலிபரப்பில் "யேசுநாதரின் திருப்பாடுகளின் வரலாறு" என்னும் நிகழ்ச்சி கத்தோலிக்க வானொலிக் குழுவினரால் நடாத்தப்படும்.

1–4–61 பெரிய சனிக்கிழமை மாலை 8–15 மணி தொடங்கி 8–30 மணிவரை "பாஸ்காப் பண்டிகை சுபசெய்தி" என்னும் நிகழ்ச்சி வண. Z. N. குறூஸ் சுவாமிகளால் நடாத்தப்படும்.

## தமிழரசுத் தந்தையின் தாயார் காலமானார்

தமிழரசுத்தந்தை திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகம்அவர்களின் தாயாரான திருமதி ஹறியற் அன்னம்மா வேலுப்பிள்ளை அவர்கள் சென்ற16-ந் திகதி வியாழக்கிழமைபிற்பகல் மரணத்திரையில் மறையலாயினார்எனும் துயரசெய்தியை அறியவந்து மனம்வருந்தலானோம். மரிக்கும்போது இவருக்கு வயது84. இவரின்மூத்தபுதல்வரே திரு. செல்வநாயகம்அவர்கள். இலங்கைத் தமிழுலகத்திற்கு இணையற்ற ஒருவீரத்தமிழ்மகனை ஈன்றளித்த இந்தஅம்மையாரின் ஆன்மா சாந்தியடைவதாக!

## அடுத்த நிதிவருடத்திலே

வருகிறஐப்பசிமாதம் 1-ந்திகதியுடன் ஆரம்பமாகும் புதியநிதிவருடத்திலே புதியபாடசாலைகள், புதியஆஸ்பத்திரிகள், புதியவீதிகளை அமைக்கும் வேலை எதுவும் நடைபெறமாட்டாது. அரசாங்கத்தின் புதியநிதிவருடத்து உத்தேசசெலவுகளைச் சித்தஞ்செய்வதன் சம்பந்தமாய் நிதிமந்திரிகாரியாலயம் மந்திரிசபைக்குச் செய்துள்ள சிபாரிசே இதற்குக்காரணமாகும். இன்னும் அத்தியாவசியமும், தவிர்க்கமுடியாதனவுமென்று கண்டாலன்றி மற்றப்படி அரசாங்ககட்டடங்கள், வீதிகளிலே பழுதுபார்க்கும் பெரிய வேலைகளும் நிறுத்தப்படவேண்டுமென்றும் இந்தச்சிக்கனசிபாரிசிலே தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

## ஆடவரான தாதிமார்கள்

யாழ்ப்பாணம், அரசினர்பெரியஆஸ்பத்திரிக்கும், மற்றும்நான்குஆஸ்பத்திரிகளுக்கும் ஆனிமாதத்திலே ஆடவரானதாதிமாரை அனுப்பிவைக்கச் சுகாதாரப்பகுதி தீர்மானித்திருக்கிறது. ஆடவரான தாதிமார்களாய்க் கண்டியிலே இப்போது பயிற்சிபெற்றுவருகிறவர்கள் வருகிறஆனிமாதத்திலே பயிற்சிமுடிந்து வெளியேறவிருக்கிறார்கள்.

## தபாற்கந்தோரும் சிங்களமும்

தபாற்கந்தோர் எஞ்ஜினியறிங் பகுதியில் தனிச்சிங்களம் நடைபெறுவதால் அதுதெரியாத தமிழ்ஊழியர்கள் பெரிதும்அவதிப்படுகிறார்கள். நிர்வாகத்தில் சிங்களம் ஒருபுறமிருக்க, அறிவித்தல்கள்தானும் சிங்களத்திலேயே விடுக்கப்படுகின்றன. தபாற்கந்தோர் எஞ்ஜினியறிங்பகுதியால் மாதம்இருமுறை வெளியிடப்படும் அறிவித்தலிலே ஊழியர்கள் கவனிக்கவேண்டிய முக்கியகுறிப்புகள் சிங்களத்திலேயே இருப்பதால் அவற்றை விளங்கிக்கொள்ளவியலாத தமிழ்ஊழியர்கள் பெரிதும் அவலப்படுகிறார்கள். இந்தஅறிவித்தலைவெளியிடும் எஞ்ஜினியர் எஸ். இராசநாயகத்தின் பெயர்தானும் சிங்களத்திலேயே தரப்படுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தினசரி பூசை வழிகாட்டி

## அடையாளங்களின் விபரம்

| | | | |
|---|---|---|---|
| † | கடன் திருநாள் | மா. | மாசற்ற இருதயமாதாவின் பூசையைத் தெரியலாம் |
| 1 | 1-ம் வகுப்புத் திருநாள் | மு. | மரித்தோர் பூசையைத் தெரியலாம் |
| 2 | 2-ம் வகுப்புத் திருநாள் | (வி. ம.) | பூசையில் விசுவாசமந்திரம் |
| யே. | யேசுவின் திரு இருதயப் பூசையைத் தெரியலாம் | ஒ. | ஒருசந்தி நாள் |

### பங்குனி மாதம்—1961

| | | | | |
|---|---|---|---|---|
| 26 | ஞா. | 1 | குருத்தோலை ஞாயிறு (வி. ம.) | (ஊ) |
| 27 | தி. | 1 | பெரிய திங்கள் | (ஊ) |
| 28 | செ. | 1 | பெரிய செவ்வாய் | (ஊ) |
| 29 | பு. | 1 | பெரிய புதன் | (ஊ) |
| 30 | வி. | 1 | பெரிய வியாழன் | (வெ) |
| 31 | வெ. | 1 ஒ | பெரிய வெள்ளி | (க) |

### சித்திரை மாதம்—1961

| | | | | |
|---|---|---|---|---|
| 1 | சனி | 1 | பெரிய சனி | (வெ) |


சத்திய வேத

# பாதுகாவலன்

1961-ம் ஆண்டு
பங்குனிமாதம் 25-ந் திகதி


## அன்றும் இன்றும்

1944-ம்ஆண்டின் வைகாசி மாதத்திலே—அதாவது இலங்கை சுதந்திரம் அடைந்துகொள்ளுமுன் "சிங்களத்தையும், தமிழையும் இலங்கையில் தேசிய பாஷைகள்—அதாவது இந்நாட்டின் உத்தியோகபாஷைகள்" ஆக்குவதற்கான பிரேரணை ஒன்று இலங்கைப்பாராளுமன்றத்தில் அரங்கேறியது. அப்போது எந்தவிதமான வகுப்புவாதமும் துவேஷித்துக் கண்டனஞ்செய்யப்பட்டது. இலங்கை மக்கள்அனைவரும் சகலவகையிலும் சமத்துவமுடையவர்களாய் இருந்துவருவார்களென அநேகவாக்குறுதிகள் அளிக்கப்பட்டன. ஒருவர் தன்னைமுதலிலே ஓர்இலங்கையரென்றும், பின்னர்தான் தன்னை ஒருசிங்களவர் அன்றேல்தமிழரென்றும் நினைக்கவேண்டுமென்று வாக்கலங்காரமாகப் பேசப்பட்டது. ஆனால், அன்று பாராளுமன்றத்தில்அரங்கேறிய அந்தப்பிரேரணையும், அப்போதைய வாக்குறுதிகளும், வாக்கலங்காரப்பேச்சுகளும் இன்றுகாற்ருய்ப் பறந்து, கனவாய்மறைந்துவிட்டன. அவற்றிற்குப்பதில் இப்போதுள்ள பல்வேறுஇனத்தினரும், மதத்தினரும், பல்வேறுகலாசாரமுடையவரும், மொழி பேசுகிறவர்களுமான குழுவினர்கள்மத்தியிலிருந்து ஒரேயொரு இனத்தவரைப் பிறப்பிக்கும் எண்ணம்ஒன்று இப்போது தலையெடுத்திருக்கின்றது. அதாவது,சிறுபான்மைமக்களின் பாஷை, கலாசாரம், சமயம் ஆகியவைகளைப் படிப்படியாக ஒழித்துக்கட்டும் இயக்கம்ஒன்று உருவாகியிருக்கிறது என்பதிலே சந்தேகமில்லை. ஏதோஓர்உடன்பாட்டுக்குவருமாறு தமிழ்த்தலைவர்கள் மீட்டும்மீட்டும்நடாத்திய சமரசப்பேச்சுகள் பயன்தரவில்லை. அவர்கள்பெற்றுக்கொண்ட வாக்குறுதிகள் ஒரு துரும்பாகத்தானும் மதிக்கப்படவில்லை, அதனல் தமிழ்அரசியல்தலைவர்கள் ஆற்ருது தங்கள் குறைநிறைகளை நிவிர்த்திபண்ணச் சத்தியாக்கிரகத்தில் இறங்குவதைத்தவிர வேறுவழியில்லையெனக் கண்டுகொண்டார்கள்.

வடக்கு—கிழக்கு மாகாணங்களிலே அஹிம்சாவழியைக் கடைப்பிடித்துச் சத்தியாக்கிரக இயக்கம் ஆரம்பமாகிச் சென்ற 20-ந்திகதியோடு ஒருமாதம்முடிவடைந்துவிட்டது. இதனைஞாபகப்படுத்துவதுபோல் அன்று மன்னரிலும் மறியல்இயக்கம் ஆரம்பமாகியுள்ளது. இந்த அறப்போரின் உன்னதஇலட்சியங்களில்ஒன்று, தமிழ்ப்பேசும் மக்கள் தங்கள்மொழிஉரிமையைப் பெறுவதாகும். சத்தியாக்கிரகிகள் பல்வேறிடங்களிலிருந்து வேகும்வெயிலையும், விடாமழையையும், பனிகுளிரையும், பசிபட்டினியையும் ஒருபொருட்டாய்மதியாது அலையலையாகத் திரண்டு, சாத்விகசமர்பூண்டு அணிநடையாகச் செல்லுங்காட்சி எவர்மனதைத்தான் உருகச்செய்யாது? சத்தியாக்கிரகிகள் மிகுந்தபொறுமையுடன் அமைதியாகவும், ஒழுங்காகவும், கட்டுப்பாடாகவும், உண்ணுவிரதம் இருந்துதானும் தங்கள்உரிமைப்போரை உன்னத முறையில் நடத்தித் தமிழுரிமைக் குரல் எழுப்புவது எவர்மனதைத் தான் ஈர்ந்துகொள்ளமாட்டாது? தாம்இழந்தஉரிமைகளை மீண்டும் பெறுவதற்காகத் தமிழ்ப்பேசும் மக்கள் கட்சிவேற்றுமையை மறந்து, மதவேற்றுமையைக் கைநெகிழ்ந்து, அருந்தியாகங்கள் மத்தியில் பேரார்வத்துடன் அறநெறிப் போர் நடத்திக் கொண்டிருக்கும்போது — சிங்களச்சகோதரர்கள்தானும் கருமத்தைஉணர்ந்து ஆதரவளிக்கமுன்வந்திருக்கும்போது அங்கே லண்டன்நகரில் பிரதமர்சிறிமாவும், நிதிமந்திரி டயஸ் பண்டாரநாயக்காவும் கூறியவைகளை — இலங்கையிலே இனஒதுக்கல் பிரச்சினையோ, வகுப்புவாதப்பிரச்சினையோ இல்லையென்று உலை மூடிகொண்டு ஊரைமூடியது போல் கூறியவைகளைக்கேட்பது பெரிதும்வேடிக்கையாகின்றது.

இங்கே நிறத்துவேஷம் இல்லவேயில்லையாம். ஆனல், அதைவிட[illegible]மாசமான இனத்துவேஷம் — தமிழ்ப்பேசும்மக்களை முற்ருகஒழித்துவிடவேண்டுமென்ற கொடியவகுப்புவாதம் தலைவிரித்தாடுகின்றதே. இலங்கையிலே இனஒதுக்கல்கொள்கை கிடையாதென்று நிதிமந்திரி கூறுகின்றார். ஆனல், ஒரே இனம், ஒரேமொழி, ஒரேமதம் முதலியவைகளை அரியாசனத்தில் அமர்த்தமுனையும்கொள்கை இனஒதுக்கல் இல்லையென்ருல் வேறென்னவென்று சொல்வது? இன்று [illegible] இலங்கைதிரும்புகின்றார். தென்னுபிரிக்காவில் நடைபெறும் இனத்துவேஷத்தை லண்டன் நகரில்கூடிய சாம்பிராச்சிய பிரதமர்களின்மகாநாட்டிலே அண்டகோளங்களும் அதிரும்படியாகக் கண்டனஞ்செய்துள்ள பிரதமர் சிறிமா இங்குதிரும்பியதும் அதேசண்டவேகஉணர்ச்சியுடன் சிறுபான்மையினரான தமிழ்ப்பேசும்மக்களின் மொழிப்பிரச்சினையைச் சுமுகமான ஒரு முடிவுக்குக் கொண்டுவருவாரா? சிறுபான்மைமக்களின் ஆதரவும், ஒத்துழைப்புமில்லாமல் எத்தகையசட்டத்தையும், எந்தவிதமான பொருளாதார அபிவிருத்தித்திட்டத்தையும் அரசாங்கம் நிறைவேற்றிவைக்க முடியாதென்பதை நன்குணர்ந்து இன்றையநெருக்கடியான பிரச்சினையைத் தீர்த்துவைக்க முன்வந்து . அதில்வெற்றிகாணுவாரா? காணுவாராயின் அவர் [illegible]க!

யாழ்ப்பாணம்
பரிசுத்த கொஞ்சேஞ்சிமாதாவின் ஆசனக்கோவிலிலே
நிறைவேற்றப்படும்

## பரிசுத்தவாரத் திருச்சடங்குகள்

**1961 பங்குனி 26-ந் தேதி குருத்தோலைஞாயிறு**

காலை 7-00 மணிக்குக் குருத்தோலைப் பவனியும் மேற்றிராணி ஆண்டவரின் பூசையும்.

**பங்குனி 30-ந் தேதி பெரிய வியாழக்கிழமை**

காலை 6-15 மணிக்கு மேற்றிராணி ஆண்டவரின் பரிசுத்த தைலங்கள் ஆசீர்வதிக்கும்பூசை.

மாலை 6-00 மணிக்கு மேற்றிராணி ஆண்டவரின் இராப்போசன ஞாபகப் பாடற்பூசை.

மாலை 11-00 மணிக்குத் திருமணித்தியாலம்

**பங்குனி 31-ந் தேதி பெரிய வெள்ளிக்கிழமை**

பிற்பகல் 4-00 மணிக்கு ஆண்டவருடைய திருப்பாடுகளினதும், மாணத்தினதும் திருச்சடங்குகள் மேற்றிராணி ஆண்டவரால் நிறைவேற்றப்படும்.

மாலை 5-30 மணிக்குச் சிலுவைப்பாதையும், சிலுவை முத்தி செய்தலும்

**சித்திரை 1-ந் தேதி பெரிய சனிக்கிழமை**

காலை 6-30 மணிக்குப் பரிசுத்த தேவதாயின் ஏழு வியாகுலங்களைப்பற்றிய தியானம்.

மாலை 10-45 மணிக்குப் பாஸ்கா விழிப்புத் திருச்சடங்குகளும், மேற்றிராணி ஆண்டவரின் பெரிய பாடற்பூசையும்.

**சித்திரை 2-ம் தேதி பாஸ்கு ஞாயிறு**

காலை 5-30 மணிக்கு முதற்பூசை
காலை 7-15 மணிக்குப் பாடற்பூசை
காலை 8-15 மணிக்கு மூன்ரும்பூசை
மாலை 4-30 மணிக்கு வேஸ்பரும் ஆசீர்வாதமும்
மாலை 6-00 மணிக்குப் பின்னேரப்பூசை.

— கட்டளைக்குரவர்.

## "இரட்சகருடைய ஊற்றுக்களிலிருந்து சீவநீரை மொண்டுகொள்ளுங்கள்"

பரிசுத்த வாரத்தில் விசுவாசிகள் சருவேசுரனுக்குத் தகுந்தமுறையில் ஆராதனைசெலுத்துவதுடன், கிறிஸ்துநாதருடைய திருப்பாடுகளின் பெறுபேறுகளை ஏராளமாக அடைந்துகொள்ளும்பொருட்டுத் திருச்சபை அண்மையில் பரிசுத்தவாரத் திருச்சடங்குகளைப் புதுமுறையில் மாற்றி அமைத்துள்ளது. திருச்சபையின் இந்நோக்கங்கள் நிறைவேறுவதற்கு விசுவாசிகள் பரிசுத்தவாரத் திருச்சடங்குகளில் விவேகத்துடன் நெருங்கிய முறையில் பங்கெடுத்தல் அவசியம். இதற்கு உதவியாகப் பரிசுத்தவாரத் திருச்சடங்குகளைப்பற்றி இங்கு சில சுருக்கமான குறிப்புகள் கூறுவாம்.

**குருத்தோலை ஞாயிறு:**

இன்றைய விசேஷ திருச்சடங்குகள் கிறிஸ்துநாதருடைய இராசரீகத்தைச் சிறப்பாக விளக்குகின்றன. யேசுநாதர் பாடுபடுவதற்குமுன் ஜெருசலேம் நகருக்குள் ஓட்டோலகராய்ப் பிரவேசித்ததைத் திருச்சபை ஞாபகப்படுத்தி, கிறிஸ்துராசாவின் புகழைப்பாடுகின்றது. குருத்தோலைச் சுற்றுப்பிரகாரம் இந்த நோக்கத்தையேகொண்டுள்ளது. ஆகையால், விசுவாசிகள் இதில் செயல்முறையில் பங்குபற்றிக் கிறிஸ்துராசாவை மகிமைப்படுத்தவேண்டும்.

**பெரிய வியாழன்:**


யேசுபெருமான் தேவநற்கருணை, குருத்துவம் என்னும் தேவதிரவிய அனுமானங்களை ஏற்படுத்தியதன் ஞாபகமாகக் கடைசி இராப்போசன ஞாபகப்பூசை மாலை 4 மணிக்குப்பின் நிறைவேற்றப்படுகின்றது. கடைசி இராப்போசனத்தின்பின் நமதாண்டவர் அப்போஸ்தலர்களுடைய பாதங்களைக் கழுவியதன் ஞாபகமாகச் சுவிசேஷ வாசிப்புக்குப்பின் ஏழைகளுடைய கால்களைக்கழுவுஞ் சடங்கு மிகப்பொருத்தமாக நடைபெறுகின்றது. திருப்பலியும், திருவிருந்துமாகிய திவ்வியநற்கருணையை நமக்கு அருளியதற்குக் கிறிஸ்துநாதருக்கு நன்றி செலுத்தும்பொருட்டு, விசுவா

(தொடர்ச்சி 6-ம்பக்கம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாடுகளின் பாதையிலே......

(1)




பாலை நிலத்திலன்று
சீவமன்னா பொழிந்தவனே!
பாதகரின் கைகளிலே
பாவியுமை ஒப்படைத்தேன்
பாரச் சிலுவைதனில்
நீர்உயிர் துறந்திடவே
தீர்வை பிலாத்திட்டான்,
இல்லை நானிட்டேன்.

(2)

கள்ளங் கபடறியாத்
தூயமனச் செம்மறியே!
கர்த்தனே! நீள்சிலுவை
எனக்காக ஏற்றீரோ?
நிலையில்லா நீர்க்குமிழி
வாழ்வினிலே நாள்தோறும்
அடுக்கிவரும் இன்னல்களை
அன்புடனே அணைத்திடுவேன்.



(3)



சோதிச் சொரூபனே!
முள்ளின் முடியோடு
பாரச் சிலுவையினாற்
பார்மீது சாய்ந்தீரோ?
பாவச் சுமையினாற்
பதைபதைத்து வீழ்ந்தீரே
பாவிஎனைப் பொறுத்தருளும்,
பாவிகளின் தஞ்சமே!

(4)

கண்ணின் கருமணியின்
தோளிற் சிலுவைதனைக்
கன்னிமரித் தாய்கண்டு
கலங்கி அழுதனளே!
இன்னல், மரணத்தின்,
ஆகுலத்தின் மத்தியிலே
எந்தன் அடைக்கலமாய்
எப்பொழுதும் இருந்திடம்மா!



(5)



பாறை வழிதனிலே
சிரோன் சிமோனு
பக்கத் துணையாகப்
பாரச்சுமை ஏற்றார்.
ஈடேற்றத் தொண்டிற்கு
என்றும் துணைபுரிந்து
ஆண்டவனே, நான்நடக்கச்
சித்தம் இரங்கிடுவீர்.

(6)

வீரமகள் திருமுகத்தைச்
சுத்திசெய்த துகில்தனில்
உவந்துன் பொன்வதனம்
பக்குவமாய்ப் பதித்திட்டீர்
உலகின் முகமனுக்காய்
உலவாது நானென்றும்
உறுதியொடு புண்ணியத்தில்
உயரத் துணைசெய்வீர்.



(7)




திங்கள் வதனமலர்
மீண்டும் புழுதியினில்
சோர்ந்து விழுந்ததுவோ?
சோரி சொரிந்ததுவோ?
பாவத்தின் படுகுழியில்
மீண்டும் நான்வீழாமல்
பாக்கியனே, கைதந்து
பாவிஎனைக் காத்திடுவீர்.

(8)

போதகனே, பின்தொடர்ந்து
கண்ணீர் உகுத்தழுத
பூவையர்க்கு ஆறுதலாய்ப்
புகன்றீரே அருள்வாக்கு.
மேதினியில் நான்செய்த
ஈனப் பவம்தீர
மீட்பின் வழிசேர
மனக்கடினம் மாற்றிடுவீர்.



(9)




சோர்வின் கடினத்தால்
சோதித் திருச்சுதனே,
மூன்றும் முறையும்
வீழ்ந்தாலும், எழுந்தீரே.
பாவிநான் சோர்வுற்று
மீண்டும் வீழ்ந்தாலும்
உறுதியுடன் எழுந்திருந்து
பரகதியை நாடிடுவேன்.

(10)

காட்டின் லீலிக்குக்
கவினுடை போர்த்தவனே,
கந்தையதும் இல்லாது
கசடர் உரிந்தாரோ?
வாட்டும் தாகத்திற்
காடிதனை வார்த்தாரோ
கற்பெனும் லீலிதனைக்
காத்திடத் துணைசெய்வீர்.



(11)



செங்கமல நற்கரமும்
சேவடியும் ஆணிகளால்
செந்நீர் வழிந்தோட
அறைந்து இழித்தாரோ?
தங்கமும் வெள்ளியும்
தற்பரனே யான்தேடேன்
உந்தன் சித்தமதை
என்றுமே தேடிடுவேன்.

(12)

மூன்றுமணி நேரம்
ஆணி முனைகளிலே
தூங்கிச் சோர்ந்து,
துடித்து மரித்தீரோ?
துயர்வாழ்வில் மரணத்தை
அன்போடு அரவணைத்து
துய்ய பரகதியில்
சேரத் துணைதாரீர்.




(அடுத்தபக்கம் பார்க்கவும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "இரட்சகருடைய ஊற்று......"

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

சிகள் இன்றையபூசையில் பக்தியுடன் பங்குபற்றித் திருவிருந்தருந்த வேண்டுமென்று, திருச்சபை பெரிதும் ஆசிக்கின்றது.

## பெரிய வெள்ளி :

இன்றைய திருச்சடங்குகள் ஆண்டவர் சிலுவையில் மரித்தநேரத்தை அண்டிப் பிற்பகல் மூன்றுமணியளவில் நடைபெறுகின்றன. யேசுநாதருடைய திருப்பாடுகளைப்பற்றிய திருவாசகமும், மகாவிண்ணப்பங்களும், திருச்சிலுவை ஆராதனையும், சற்பிரசாத அனுபவிப்புமே இன்றைய பிரதான சடங்குகளாம். மகாவிண்ணப்பங்களில் ஞான, உலக அதிகாரிகளுக்காகவும், விசுவாசிகள், ஞானஸ்நான ஆயத்தக்காரர், கிறிஸ்தவரல்லாதார் முதலியவர்களுக்காகவும் மன்றாடப்படுகின்றது. இது திருச்சபையின் பொதுத்தன்மையைத் துலக்கமாகக் காட்டுகின்றது. எமது இரட்சணியத்தின் கருவியாகிய சிலுவை இன்று குருக்களாலும், விசுவாசிகளாலும் பகிரங்கமாக ஆராதிக்கப்படுதல் மிகவும் பொருத்தமே.

பெரிய வெள்ளியே திருச்சபையின் பிரதான துக்கதினம். இதன் அறிகுறியாகப் பூசைப்பலி ஒப்புக்கொடுத்தல் இன்று நிறுத்தப்பட்டிருக்கிறது. எனினும், விசுவாசிகள் யேசுநாதருடைய திருப்பாடுகளின் பெறுபேறுகளை அதிகமாக அடைந்துகொள்ளும்பொருட்டு, அவர்கள் இத்தினத்திலும் திருவிருந்தருந்தத் திருச்சபை இப்போது வசதிகள் செய்துள்ளது.

## பெரிய சனி :

யேசுநாதர் இரவிலேயே கல்லறையைவிட்டு உயிர்த்தெழுந்ததினால், பெரிய சனிக்கிழமைத் திருச்சடங்குகள் இரவிலே திருவிழிப்புச்சடங்குகளாக நிறைவேற்றப் படுகின்றன. ஆரம்பத்தில் புதுநெருப்பு ஆசீர்வதிக்கப்படுகின்றது. அதன்பின், பாஸ்கா மெழுகுவர்த்தி ஆசீர்வதிக்கப்பட்டுப் புது நெருப்பிலிருந்து கொளுத்தப்படுகின்றது. பாஸ்கா மெழுகுதிரி சிலுவையில் அறையுண்டு மரித்த யேசுநாதரைக் குறிக்கின்றது. எரியும் பாஸ்காத்திரி உலகத்தின் ஒளியாகிய உயிர்த்தெழுந்த கர்த்தரைக் குறிக்கின்றது. எரியும் பாஸ்காத்திரியிலிருந்து விசுவாசிகளின் திரிகள் கொளுத்தப்படுதல் எமது விசுவாசத்தின் உற்பத்தியையும், பொறுப்பையும் நன்கு விளக்குகின்றது. அடுத்துவரும் மங்களகீதம் உத்தானமான கிறிஸ்துநாதரின் புகழைப் பாடுகின்றது. ஞானஸ்நான ஆயத்தக்காரருக்குரிய திருவாசகங்கள் வாசிக்கப்பட்ட பின், ஞானஸ்நானநீர் வெகு ஆடம்பரமாக மந்திரிக்கப்படுகின்றது. இன்றைய தினத்தில் எமது ஞானஸ்நானத்தைப்பற்றி நாம் சிந்தியாமல் இருக்க முடியாது. எனவேதான் திருச்சபை இப்போது ஞானஸ்நான வாக்குத்தத்தங்களைப் புதுப்பித்தல் என்னும் அருட்சிக்குரிய புதுச்சடங்கை மிகப் பொருத்தமாக இங்கு இணைத்துள்ளது. அர்ச்சியசிஷ்டர்களின் பிரார்த்தனை பாடிமுடிந்ததும் பாஸ்காதிருவிழிப்புப்பூசை குதூகலமாக நிறைவேற்றப்படும். இச்சடங்குகளில் திருச்சபையின் விருப்பத்திற்கிணங்க விவேகத்துடன் பங்குபற்றிப் பயன் அடைவோமாக.

---

### கத்தோலிக்க ஆசிரியைகளின் ஞான ஒடுக்கம்

யாழ்ப்பாண மேற்றிராசனக் கத்தோலிக்க ஆசிரியைகளுக்கு ஒரு விடுதி ஞானஒடுக்கம் பாஷையூர் சென் இறப்பாயேல் கன்னியர் மடத்தில் 26–4–61 புதன் மாலை 6மணிக்குத் தொடங்கி 30–4–61 ஞாயிறு காலை 7மணிக்குத் திவ்விய பூசைப்பலியுடன் முடிவு பெறும்.

இந்த ஞானஒடுக்கத்தில் பங்குபற்ற விரும்பும் ஆசிரியைகள் மேற்படி மடத்துச் சங். தாயார் அவர்களுக்குச் சித்திரை மாதம் 20-ஆம் திகதிக்கு முன்னர் அறிவித்து இட ஒழுங்கு செய்யுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

நீ மரிய மார்செலா
காரியதரிசி

யாழ்ப்பாண மேற்றிராசனக்
கத்தோலிக்க ஆசிரியர் சங்கம்

---

### அர்ச். பிரான்சீஸ்குவின் மூன்றாஞ்சபை

அர்ச். பிரான்சீஸ்குவின் மூன்றாஞ்சபை மாதாந்தக்கூட்டம் இம்மாதம் 25-ந் தேதி சனிக்கிழமை பி. ப 4 மணியளவில் சஞ்சூசையப்பர் சிற்றாலயத்தில் நடைபெறும். கூட்டமுடிவில் பகுதித்தலைவர்கள் சங்கம் நடைபெறும். ஆகவே, பகுதித்தலைவர்கள் தவறாது சமுகங்கொடுக்குமாறு தயவாய் வேண்டுகின்றேன்.

A S. FRANCIS OF MARY,
சபைக்கர்த்தருக்காக

---

● **வேதபோதகநாடுகளில் கத்தோலிக்கர் தொகை:** கடந்த பத்து ஆண்டுகளில் 3கோடியிலிருந்து $4\frac{1}{2}$ கோடியாக உயர்ந்துள்ளது.

* * *

● **ஆபிரிக்காவில்:** குருமாரில் 100-க்கு 35 பேரும், சந்நியாசிகளில் மூன்றில் ஒரு பங்கும் ஆபிரிக்கர்.

---

# கோட்டுவிற்பனவு விளம்பரம்

**யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டில்**

**இல. M. B. 3051**

நெடுந்தீவு மேற்கு
மூத்தவர் கதிர்காமு
— வழக்காளி.
எதிராக
நெடுந்தீவு மேற்கு
நாகநாதர் மருதையினர்
— எதிராளி.

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் M. B. 3051-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி, பின்னால் விபரிக்கப்படும் நான்கு துண்டுக் காணிகள் 1961-ம்ஆண்டு மே (வைகாசி)மீ 3-ந்உ (3-5-61) புதன்கிழமை முற்பகல் 8 மணிதொடக்கம் அந்தந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை: முதல் வட்டி ரூபா 561-ம், மேலும் 300 ரூபாவுக்கு 22-9-59 திகதி தொடக்கம், 16-6-60 திகதிவரைக்கும் வருடமொன்றுக்கு 12% வட்டியும், அதன்பின் முழுத்தொகைக்கும் இறுக்கும்வரைக்கும் வருடமொன்றுக்கு 5%வட்டியும், கோட்டுச் செலவு ரூபா 144-80 சதம்.

### காணிகளின் விபரம்

1. வடமாகாணம், யாழ்ப்பாண டிஸ்திறிக் தீவுப்பகுதி, நெடுந்தீவுக் கோவிற்பற்று, நெடுந்தீவு மேற்கிறை "மாலியன் குளம்" ஏறக்குறைய நிலப்பரப்பு 50. ஆனால், அளவின்படி நிலப்பரப்பு 19 குளிகள் 1!. பனைகளும் வடலிகளும், வேப்பமரங்களும், கிணறும். இதற்கு எல்லை: கிழக்கு–வயிரவநாதர் நாகப்பருக்கும், மற்றவர்களுக்குமுரிய ஆதனம். வடக்கு—கணபதி கந்தையாவுக்கும், மறுபேருக்கும், இளையதம்பி மனைவி வேலாசிப்பிள்ளைக்கும், மறுபேர்களுக்குமுரிய ஆதனங்கள். மேற்கு—முருகேசு கதிர்வேலுவுக்கும், மற்றவர்களுக்குமுரிய ஆதனம். தெற்கு–கணபதி சண்முகத்துக்கும், மறுபேர்களுக்கும், ஆறுமுகம் கைம்பெண் சின்னத்தங்கச்சிக்கும், மறுபேருக்குமுரிய ஆதனம் இதிலடங்கும் வீடும், தென்னைமரங்களும் பிறநீங்கலாகச் சொரியலாய் $\frac{1}{5}$ பங்கும் அதைச்சேர்ந்தவைகளும்.

2. ஷெ நெடுந்தீவு மேற்கிறை "முதலைக் கிடங்கு" ஏறக்குறைய நிலப்பரப்பு 30. ஆனால், அளவின்படி நிலப்பரப்பு 17 குளிகள் $7\frac{1}{5}$. பனைகளும், வடலிகளும். இதற்கு எல்லை: கிழக்கு—நாகேந்திரர் கந்தையாவுக்கும், பங்காளர்களுக்கும், சண்முகம் மனைவி சின்னத்தங்கச்சிக்கும், பங்காளர்களுக்குமுரிய ஆதனங்கள். வடக்கு — மூத்தவர் ஐயம்பிள்ளைக்கும், பங்காளர்களுக்குமுரிய ஆதனங்கள். மேற்கு—விசுவலிங்கம் மனைவி தெய்வானைக்கும, பங்காளர்களுக்கும், காத்திகேசு ஐயம்பிள்ளைக்கும்,பங்காளர்களுக்குமுரிய ஆதனங்கள். தெற்கு—எதிரிக்கும் பங்காளர்களுக்குமுரிய ஆதனங்கள். இதிலடங்கிய முழுவதிலும் சொரியலாய் $\frac{1}{20}$ பங்கும் அதற்குச்சேர்ந்தவைகளும்.

3 ஷெ நெடுந்தீவு மேற்கிறை "மாலியன் குளம்" ஏறக்குறைய நிலப்பரப்பு 40 ஆனால்,அளவின்படி நிலப்பரப்பு 31, குளிகள் 2. பனைகளும் வடலிகளும், வேப்பமரங்களும். இதற்கு எல்லை: கிழக்கு—இராமநாதர் மனைவி பாறுவதிக்கும், தில்லைநாதர் கணபதிப்பிள்ளைக்கும், பங்காளர்களுக்குமுரிய ஆதனங்கள். வடக்கு—கணபதி நாகப்பனுக்கும், பங்காளர்களுக்கும், ஐயம்பிள்ளை கைம்பெண் நாகமுத்துவுக்குமுரிய ஆதனங்கள். மேற்கு — இராமநாதர் காத்திகேசுவுக்கும், பங்காளர்களுக்குமுரிய ஆதனங்கள். தெற்கு — எதிரிக்கும், பங்காளர்களுக்குமுரிய ஆதனங்கள். இது முழுவதிலும் சொரியலாய் $\frac{1}{20}$ பங்கும் அதைச் சேர்ந்தவைகளும்.

4. ஷெ நெடுந்தீவு மேற்கிறை "பறங்கி தோட்டம்" நிலப்பரப்பு 80. பனைகளும், வடலிகளும். இதற்கு எல்லை: கிழக்கும், வடக்கும் — முடிக்குரிய ஆதனம். மேற்கு – ஒழுங்கை. தெற்கு— ஒழுங்கையும், முடிக்குரிய ஆதனமும். இது முழுவதிலும் சொரியலாய் $\frac{1}{4}$ பங்கும் அதைச் சேர்ந்தவைகளும். ஆனால், தென்னம் பயிர்கள் நீங்கலாக உரியன.

**வி. செ. குட்டிப்பிள்ளை,**
கொமிஷனர்.

643, காங்கேசன்துறை வீதி,
வண்ணார்பண்ணை, 16-3-61.

---

*செப அப். சபை வெளியீடு*

### பங்குனி மாதம்

**பொதுக்கருத்து:** தற்கால முன்னேற்றங்களில் காணப்படும் மாயவலைகளின் மத்தியில் குடும்பங்கள் திருச்சபையின் போதனையாலும், தேவதிரவிய அனுமானங்களை அடிக்கடி பெறுவதாலும் உறுதிப்படுத்தப்படும்படியாக வேண்டிக்கொள்வது.

**வேதபோதககருத்து:** சுதேச குருமாரியாவரும்தற்காலதேவைகளுக்கு ஏற்றவண்ணம் உறுதியான உத்தம பயிற்சிபெறுமாறு மன்றுடிக்கொள்வது.

### காலைக்காணிக்கைச் செபம்

யேசுவின் திருஇருதயமே, நாங்கள் கட்டிக்கொள்ளும் துரோகங்களுக்குப் பரிகாரமாகவும், தேவரீர்திருப்பீடத்தில் ஓயாமல் உம்மைத்தானே பலியாகஒப்புக்கொடுக்கும் சகல கருத்துகளுக்காகவும் அடியேன் இன்றுசெய்யும் செபங்களையும், கிரியைகளையும், படுந்துன்ப வருத்தங்களையும் அச்சியசிட்ட கன்னிமரியாயின் மாசில்லாத இருதயத்தின்வழியாக, உமக்கு ஒப்புக்கொடுக்கிறேன். விசேஷமாகச் சபையாருக்குக் குறிக்கப்பட்ட சகல கருத்துகளுக்காகவும், பரிசுத்த பாப்பரசர் இம்மாதத்துக்கென நியமித்த கருத்துகளுக்காகவும் அவைகளை ஒப்புக்கொடுக்கிறேன்.

---

● **உரோமையில் தொழிலாளர் மாநாடு:** வரும் மே 14-ந்தேதிமுதல் 3நாட்களுக்கு உரோமையில் உலகின் பலநாடுகளைச் சேர்ந்த கத்தோலிக்க தொழிலாளர்களின் பிரதிநிதிகள் சுமார் ஓர்இலட்சம்பேர்கூடி மாநாடுநடத்தப் போகின்றனர். தொழிலாளர் பிரச்சினையைப்பற்றிப் பாப்பரசர் சிங்கராயர் எழுதிய சுற்றுநிருபத்தின் 70-வது ஆண்டுவிழாவைச் சிறப்பிக்கவே இம்மாநாடு கூடுகின்றது. பிரதிநிதிகள் அனைவரும்சேர்ந்து அர்ச். இராயப்பரின் பேராலயத்திடலுக்கு ஒருபெரும்பவனியாகச் செல்வர்; முக்கிய தலைவர்கள் பாப்பரசரைப் பேட்டிகாண்பர்.

---



# பாடுகளின் பாதையிலே ...


(5-ம் பக்கத் தொடர்ச்சி)

(13)

பொன்னர் திருமேனிப்
பூவாடிப் போனதின்பின்
அன்னை மடியணையில்
அன்பே! நீர் சாய்ந்தீரோ?
கன்னித் திருத்தாயே!
கவலைக் கடலே! நீர்
பாவியாம் எந்தனையும்
உம்மடியில் ஏற்றிடம்மா.

(14)

மாண்டு மடிந்தீரோ?
மண்ணிற் புதைந்தீரோ?
மாபரனே மூன்றாம்நாள்
புத்துயிரும் பெற்றீரோ?
பாவம் புதைத்துப்
புதுவாழ்வு வாழ்ந்திடநான்
சீவியமே! நின்பாதம்
இறைஞ்சுகிறேன், ஈந்திடுவீர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாலர் பக்கம்



அன்புத் தம்பி, தங்கையரே!

பரிசுத்தவாரம் அண்மிவிட்டது. அது குருத்தோலை ஞாயிறுடன் ஆரம்பிக்கின்றது. இந்தப் பரிசுத்தவாரத் திருச்சடங்குகள் நாம் இரட்சணியத்தில் பங்கடையப் பெரிதும் உதவும். ஆகவே, இவைகளில் கருத்துடன் பங்குகொள்ள வேண்டும்.

அதற்குத் திருவாரச் சடங்குகளை விளக்கும் நூல்கள், கட்டுரைகளைத் தேடிப் படியுங்கள். இச்சடங்குகளை விபரித்து, திருச்சடங்குகளில் பங்குபற்றும் முறைப் புத்தகங்களை வைத்திருந்து அவைகளின் உதவியுடன் பரிசுத்தவாரத்தைப் பக்தியாய் அனுசரிக்கலாம்.

உங்கள்அன்புள்ள அண்ணா

பாலர்பக்கத் தொடர்கதை

## தயாள உள்ளம்

### முன்பாகத்தின் சுருக்கம்:

டேவிட் வருவான் வருவான் என்று ஏழைக் கிழவர் வழிமேல் விழிவைத்து எதிர்பார்த்து இருக்கையில் திடீரென டேவிட்டும் பெற்றோரும் ஒருகாரில் வந்து அவரைக் காரில் ஏற்றிக்கொண்டு வீட்டுக்குச் சென்றனர். நத்தார்த் திருநாளை முன்னிட்டுச் சூசைநாதனின் வீடு மிகவும் அலங்காரமாகச் சோடிக்கப்பட்டிருந்தது. கிழவர் அழகான பட்டாடை அணிந்து மின்சாரதீப அலங்காரங்களை எல்லாம் கண்வெட்டாது பார்த்துக்கொண்டு நின்றார். அவரை டேவிட்டின் அறைக்கு அழைத்துச்சென்றாள் பிலோ. மிகுதியைத் தொடர்ந்து படியுங்கள்.

அழகான சிறுகுடில்ஒன்று அமைத்திருந்தான் டேவிட். அதனுள்ளிருந்து நீலநிறமான ஒளிதான்பாய்ந்து வந்ததேதவிர விளக்கு எங்கே வைக்கப்பட்டிருந்தது என்றே தெரியவில்லை. வெண்ணிற வைக்கோல் நீலங்கலந்து துலங்கியது. அதன் மீது, படுத்தும், தாவியும் விளையாடிக்கொண்டிருக்கும் ஆட்டிக்குட்டிகள் அந்த நீலஒளியில் எவ்வளவு அழகாக இருந்தன! அவையெல்லாம் காவல்செய்ய நடுவே வைத்திருந்தான் யேசுவின் சின்னச்சிலையொன்றை. ஆகா! அதில்தான் என்ன அழகு!

மலரும் ரோசா இதழ்கள் போன்ற வெல்வெட் கன்னங்கள் நீல ஒளியோடு கலந்து அழகுசெய்துகொண்டிருந்தன. இரத்தம்போன்ற சிவந்த சிறிய பவளஉதடுகள் விரிந்து புன்னகை செய்துகொண்டிருந்தன. கன்னங்கரியவிழிகள்; அதற்கேற்ற அழகான புருவங்கள் வில்லென நின்று அவ்விழி இரண்டையும் காவல்செய்தன. வட்டமாகச் சுருண்ட இரண்டுகேசச் சுருள்கள் அரை நிலவுபோன்ற அதன்நெற்றியில் விழுந்து அதன் எழிலுக்கு மெருகூட்டின.

கிழவர் வியந்துபோய்விட்டார்! அவரது சுருக்கம்விழுந்த கன்னங்களிலும், குழிவிழுந்த கண்களிலும் கூட அற்புததேசு உண்டானது. "இந்தச் சின்னப்பயலுக்குத்தான் எவ்வளவு திறமை!" அவர்வாய் விட்டுக் கூறுவதற்கும் டேவிட் உள்ளே நுழைவதற்கும் சரியாக இருந்தது.

"என்ன தாத்தா! சின்னப் பயல் என்றால் திறமை இருக்கக்கூடாதா?" என்றான் டேவிட்.

"யார் அப்படிக் கூறினார்? உனது குணத்துக்கும், திறமைக்கும் இஃது ஓர் எடுத்துக்காட்டல்லவா?" என்றார் கிழவர்.

"ஆவே! ஆவே! ஆவே! ... டாங்! டாங் ..." மணி பதினொன்று நாற்பத்தைந்து.

சூசைநாதன் தன்குடும்பத்துடன் செபத்தில் ஆழ்ந்துவிட்டார். ஆண்டவருடைய வருகைக்கு ஆயத்தம் செய்யும் அக்குடும்பத்தில் கிழவரும் பங்கெடுத்துக் கொண்டார். அவருக்குச் செபம் சொல்லத் தெரியாது என்று நினைக்கிறீர்கள்? அதுதான் இல்லை. டேவிட்தான் சொல்லிக்கொடுத்திருக்கிறானே! பொழுது விடிந்தால் 'கிறிஸ்மஸ்' நாளன்று ஞானஸ்நானம் பெறப்போகிறவராயிற்றே!

செபத்தை முடித்துக்கொண்டு எல்லோரும் எழுந்துவிட்டனர். கிழவர் மட்டும் எழும்பவில்லை. அதுவல்ல ஆச்சரியம்; டேவிட் தோத்திரஞ் சொல்லியும் பதிலின்றிப் பேசாமல் இருந்ததுதான் டேவிட்டிற்குப் பெருத்த வியப்பாகப் போய்விட்டது. அருகில் சென்று "தாத்தா!" என்றழைத்தான் டேவிட், பதில் இல்லை.

"தாத்தா! தாத்தா!"

"உம் ..." ஒரு முனகல்தான்; அதைத்தவிர வேறெதுவுமேஇல்லை.

இதைக் கண்டதும் சூசைநாதனது குடும்பம் அப்படியே திடுக்கிட்டுவிட்டது. சூசைநாதன் மெல்லக் குனிந்து கிழவரின் கைகளைப் பிடித்துப் பார்த்தார். உடனே புரிந்துகொண்டார். டாக்டருக்குப் படித்துவிட்டு அந்தத் தொழிலில் ஈடுபடாமல் இருந்த அவருக்குக் கிழவனின் நிலையைப் புரிந்துகொள்ள அதிகநேரம் எடுக்கவில்லை.

டேவிட் தந்தையின்முகத்தைத் துடிதுடிக்கும் நெஞ்சோடு பார்த்தான். அதிலே கலக்கம் நிறைந்திருந்தது.

"டேவிட், நாளையல்ல; இன்றே ஞானஸ்நானம் கொடுக்கவேண்டியாகிவிட்டது!" சூசைநாதனின் கண்கள் மடமடவென்று நீரை உகுத்தன.

"அப்பா!" டேவிட் வீரிட்டலறினான். அன்னம்மாள் மௌனமாகக் கண்ணீர் வடித்தாள். ஒன்றும் புரியாத பிலோ விழித்தாள்.

"டேவிட் தண்ணீரும், வெள்ளைத்துண்டும் எடுத்துக்கொண்டுவா; நம்மால்செய்யமுடிந்த கடைசிஉதவியும், கடமையும் இதுதான்; சீக்கிரம்!" சூசைநாதன் துக்கம் தொண்டையை அடைக்கக் கூறினார்.

பொம்மைகளாக நின்றிருந்த அன்னம்மாளும், டேவிட்டும் நகர்ந்து ஆளுக்கொருபொருளாகக் கொண்டு வந்தனர். சூசைநாதன் ஞானஸ்நான மாத்திரையை உச்சரித்துக்கொண்டே வெள்ளைத் துணியால் நீரை அள்ளிப் பிழிந்து தலையில் வார்த்தார். கிழவருக்குத் தம்தந்தையின் பெயரான ஆரோக்கியநாதன் என்னும் பெயரையே சூட்டினார். ஞானஸ்நானம் முடிந்துவிட்டது.

"ஆவே! ஆவே! ஆவே!..." மணி பன்னிரண்டேகால் அடித்து ஓய்ந்த அதே நேரத்தில் கிழவரின் ஆவியும் அவரைவிட்டுப் பிரிந்தது.

ஆசையோடு அன்புகாட்டிப் பாசம் வளர்த்த தாத்தா டேவிட்டின் பாசச் சுமையோடு பறந்து போய்விட்டார் மோட்ச பிதாவின் வீட்டுக்கு.

டேவிட் கதறினான். முகத்தில் அறைந்துகொண்டு அழுதான். புரண்டான். சூசைநாதன் எவ்வளவு முயன்றும் மடைதிறந்து ஓடிவரும் அவனது கண்ணீரை நிறுத்த முடியவில்லை. சற்றுநேரத்தின்பின் எழுந்தான். அவனது அழுகை எங்கோ ஓடி மறைந்துவிட்டது. துயரத்திற்குப் பதிலாக அந்த இளம் முகத்தில் அமைதி பிரதிபலித்தது. ஆடும், மாடும், மாமரியும், சூசைமாதவனும் காவல்புரிய, நடுவே புன்னகையுடன் பொற்றாமரைபோல் வீற்றிருந்த யேசுபாலனின் முகத்தை நோக்கினான். கிழவரின் ஆன்ம இளைப்பாற்றிக்காக மன்றாடினான். தனதுவீட்டில் ஈமக்கிரிகைகள் செய்யக் கிடைத்ததற்கு நன்றிகூறினான்.

பாடசாலை ஆரம்பமாகியது. டேவிட் வகுப்பேற்றம் பெற்றுவிட்டான். முன்போலப் படிக்கத் தொடங்கிவிட்டான். மத்தியானச் சாப்பாட்டிற்கு மணி அடித்தால் அவனுக்குக் கிழவரின் நினைவு வரும். அவன் அன்றுதானே ஒரு தீர்மானம் செய்துகொண்டான். அதாவது, பாடசாலையில்கிடைக்கும் பணிசைச் சேகரித்துக் கிழவரின் ஞாபகமாக ஏழைகளுக்குக் கொடுப்பதாக அவன் உறுதிசெய்தான். அப்படியே செய்துவருகிறான்.

—※—

## சிறுவர் அறிவுச் சக்கரம்—1

### சரியான விடைகள்

I

1. அர்ச். சூசையப்பர்
2. அர்ச். வெரோணிக்கம்மாள்
3. அர்ச். அந்திரேசப்பர் (பெலவேந்திரர்)
4. அர்ச். இராயப்பர்
5. அர்ச். செபஸ்தியார்
6. அர்ச். ஆரோக்கியநாதர்
7. சுவிசேஷகராகிய அர்ச். அருளப்பர்
8. அர்ச் செசிலியம்மாள்.

II

1. திஸ்மஸ்
2. அருமத்தேயாபட்டினத்து யோசேப்பு
3. அருமத்தேயா யோசேப்புவும், நீக்குதேமுவும்.
4. லொஞ்ஜீனஸ்
5. "நசரேனுவாகியயேசு யூதரின் இராசா"

முதலாவது அறிவுச்சக்கரத்திற்கு நால்வர்மாத்திரம் முழுதும் சரியான விடைகளை அனுப்பியிருந்தனர். ஒருவர் ஒருபிழையுடன் விடை எழுதியிருந்தார்.

சரியானவிடைகள் அனுப்பியவர்கள்

1. யோசேப் நீக்கிலஸ், — நாவாந்துறை
2. மரிஸ்ரெல்லா அலெக்சிஸ் மரியநாயகம், —மான்தீவு, மட்டுநகர்
3. றெஜீனா கொன்ஸ்ரன்ரைன், — அச்சுவேலி
4. அ. அன்னமேரி, — இளவாலை
5. எசபியூஸ் பெர்னாண்டு — கொழும்பு, 14

ஒருபிழையுடன் விடையனுப்பியவர்

1. இராசன் பிலுப்புப்பிள்ளை, — கரம்பன்

முதலாவது அறிவுச்சக்கரத்தில் முழுதும் சரியானவிடைகள் அனுப்பியவர்களுக்கு அண்ணாவின் பாராட்டுகள். தம்பிதங்கையரே, முதல் முறையோடு சோர்ந்துவிடாதேயுங்கள். அடுத்த அறிவுச்சக்கரத்தை விரைவில் எதிர்பாருங்கள். அதிலே அதிகமான தம்பிதங்கையர் கலந்துகொள்வார்களென எதிர்பார்க்கிறேன்.

பாப்பரசரின் அறைக்குச்செல்லச்

## சுரங்கப்பாதை

"எங்கள் வீட்டிலிருந்து பாப்பரசரின் தனியறைவரைக்கும் ஒரு சுரங்கப்பாதையை அமைப்பேன்; பின்னர் திடீரெனப் பாப்பரசரின் அறைக்குள் புகுந்து அவரைத் திகைப்படையச் செய்வேன்" என அண்மையில் ஒரு இத்தாலிய சிறுவன் தனது கட்டுரையொன்றில் வரைந்திருந்தான். நான் பாப்புவை எங்ஙனம் சந்திப்பேன் என்பது பற்றி ஒரு கட்டுரை வரையுமாறு அச்சிறுவனின் வகுப்பாசிரியர் பணித்திருந்தார். அதற்கு விடையாகவே அப்பையன் மேற்கூறியவாறு எழுதியிருந்தான். வேறொரு சிறுவன் தனது கட்டுரையில் "நான் பாப்புவை ஒருபோதும் காணவில்லை; பாப்பரசர் எங்கள் பள்ளிக்கூடத்துக்கு வராமல் அவரது சுவிஸ் காவலர்கள் தடுத்துவிடுகின்றார்கள் என எழுதினான்.

"சந்ததி விருத்தியைத் தேவையான அளவுக்குக் கட்டுப்படுத்திக் கொள்ளச் சுய கட்டுப்பாடு ஒன்றுதான் நிச்சயமான மார்க்கம். கர்ப்பத்தடைக் கருவிகளைப் பயன்படுத்தினால் அது மனித குணத்தின் தற்கொலையாகும்."

—காந்தியடிகள்


## மீட்கப்படாத நகைகளின் ஏல விற்பனை

யாழ்ப்பாணம், பெரிய தெருவில் அடைவுபிடித்துவரும் அருணாசலம் சண்முகம் மகாதேவா அவர்களிடம் 1956-ம் ஆண்டு ஏப்ரல்மாதம் 1-ம் திகதிதொடக்கம், 1958-ம் ஆண்டு மார்ச்மாதம் 31-ம் திகதிவரையும் அடைவுவைக்கப்பெற்று, குறித்தகால எல்லைக்குள் மீட்கப்படாத நகைகள் 1961-ம் ஆண்டு ஏப்ரல்மாதம் 21-ந் திகதி வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிதொடக்கம் அவரது அடைவுகடையில் பிரசித்தஏலத்தில் விற்கப்படும். இடாப்புத் தேவையானோர் எழுதிப் பெற்றுக்கொள்ளலாம்.

பொ. இராசரத்தினம்,
வெந்தீஸ் மேஸ்தர்.

யாழ்ப்பாணம்,
21-3-61


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கத்தோலிக்க செய்திகள்

## பரிவட்டச் சேலையின் கண்காட்சி

ஆண்டவரின் உடலைமூடிய பரிசுத்த துணி இவ்வாண்டு பகிரங்க காட்சிக்காகவும், வணக்கத்துக்காகவும் வெளியே வைக்கப்படுமென்று எதிர்பார்க்கப்படுகிறது. வரப்போகும் வத்திக்கான் சங்கத்தின் சிறப்பாகவும், இத்தாலிநாடு ஐக்கியப்பட்டு நூறுண்டுகள் நிறைவுறுதலின் நினைவாகவும் இவ்வேற்பாடு செய்யப்படுகிறது. நமது ஆண்டவரைச் சிலுவையிலிருந்து இறக்கி அடக்கம்செய்யும்போது அவரது உடலைச்சுற்றியிருந்த புனிதத்துணி இது; இத்தாலிய அரசினரின் உடைமை; இத்தாலிய அரசாங்கத்துக்கு இத்தாலிய அரசர் ஒருவரால் அளிக்கப்பட்டது. பாப்பரசரும், சாவாய் அரசகுடும்பமும் அனுமதியளித்தால்தான் இந்தப் பரிசுத்தபண்டத்தைப் பகிரங்கக்காட்சிக்காக வெளியே வைக்கலாம்என்று நிபந்தனைவிதித்து அவ்வரசர் இத்தாலிய அரசாங்கத்தோடு உடன்படிக்கை செய்திருக்கிறார். இப்புனிதத்துணி இத்தாலியின் வடபகுதியில் தூரின்நகரின் மேற்றிராசன ஆலயத்திலுள்ள குவாரீனி சிற்றாலயத்தில் வைத்துப் பாதுகாக்கப் படுகிறது. 30ஆண்டுகட்குமுன் ஒருமுறை பகிரங்கக்காட்சிக்காக வெளியே வைக்கப்பட்டது.

* * *

## முத். தெயோவேன் வெனுர்ட்டின் நூற்றாண்டு விழா

பாரீஸ் அந்நிய வேதபோதக சபையைச்சேர்ந்த இப்புனிதகுரு வியெற்னமில் தோங்-கிங் என்றஇடத்தில் வேதசாட்சியாகமரித்து நூறுண்டுகள் நிறைவுறுகின்றன. இவர் 21-11-1829-இல் பிறந்து 2-2-1861-இல் மரித்தவர். தமது சகோதரி மெலானிக்குஎழுதிய கடிதங்களில் இவரது ஆன்மஇரட்சணிய ஆவலும், வேதபோதக மேன்மையும் வெள்ளிடைமலைபோல் விளங்கிநிற்கின்றன. அர்ச். சின்னத்தெரேசம்மாளின்வாழ்வை வளப்படுத்த முன்மாதிரியாகஉதவிய வாழ்க்கைவரலாறுகளில் இவருடையதும் ஒன்று.

* * *

● **கொலந்தில் கத்தோலிக்க கட்சித்தலைவர் ஓய்வு:** பேராசிரியர் ரோம்என்பவர்உடல்நலக்குறைவுகாரணமாக, அரசாங்கசேவையிலிருந்து விலகி ஓய்வெடுத்துக்கொள்ளப் போகின்றார். அவர் பதவிவிலகுவதால் கொலந்தின் கத்தோலிக்கர் ஒருபெருந் தலைவரை இழக்கின்றனர். கொலந்தின் பாராளுமன்றம் தனது தலைசிறந்த, திறமைவாய்ந்த ஓர்உறுப்பினரை இழக்கின்றதுஎன்று ஆம்ஸ்டர்டாம்நகரின் தினத்தாள்ஒன்று அவரைப்பற்றிப் பெருமையாக எழுதியிருக்கிறது. கடந்த உலகப்போருக்குமுன் இவர் சமூகத்துறை அமைச்சராக இருந்தார்; சென்ற 15ஆண்டுகளாக மேற்கூறியகட்சியின் தலைவராக அரும்பணி ஆற்றி வந்துள்ளார்.

* * *

● **ஆலயங்கள்கட்ட அரசினர் உதவி:** கொலந்துநாட்டின் பாராளுமன்றத்தில் ஒருபுதியமசோதா கொண்டுவரப் பட்டுள்ளது. அதன்படி 1961 பங்குனிக்குப்பின் புதிதாய்க் கட்டப்படும் நிரந்தரமான ஆலயங்கட்கெல்லாம் கால்பங்குசெலவை அரசாங்கமே மேற்கொள்ளும். இம்மசோதா சட்டமானால் 10ஆண்டுகட்கு அமுலில்இருக்கும். நகரப்பகுதிகளும், நாட்டுப்புறத்திலுள்ள ஊர்களும் விரிவடைந்துள்ளன; புதுவீடுகள்பல எழும்பியுள்ளன; ஆனால், அவற்றிற்குப்போதுமான ஆலயங்கள் இல்லை. இக்குறைநீக்கத் திருச்சபைஅதிகாரிகளுக்கு ஓரளவு துணைபுரியவே இம்மசோதா உருவாகியிருக்கிறது.

## சுவையுடனும் எளிமையாகவும் போதியுங்கள்

கத்தோலிக்க குருமார்செய்யும் பிரசங்கங்கள் சுவையுடன் கூடியதாகவும் விளங்கிக்கொள்வதற்கு எளிமையானதாகவும் காணப்படவேண்டுமெனப் பாப்பரசர் குறிப்பிட்டிருக்கிறார். அண்மையில் தபசுகாலப் பிரசங்கங்களை ஆயத்தம்செய்த குருமார்கூட்டத்தில் அவர் இவ்விதம்கூறினார். பிரசங்கங்கள் நீளமானதாயிருப்பின் கேட்போர் அலுப்படைந்து விடுவார்கள். சுவையின்றியிருப்பின் அவர்கள் மனதில் வேறுபலஎண்ணங்கள் குடிகொள்ளும். விளங்கிக்கொள்வதற்குக் கரடுமுரடாய் இருப்பின் அப்பிரசங்கத்தினால் பிரயோசனமேயில்லைஎனப் பாப்பு மேலும் கூறினார்.

* * *

## பசியினால் ஆண்டுதோறும் மரிப்போர் தொகை 4 கோடியாம்

பசியினாலும், பஞ்சத்தினாலும் ஆண்டுதோறும் இறந்துவரும் மக்களின் தொகை 4கோடியாக அதிகரித்துக் கொண்டே போகிறது. இந்த அபாயத்தைத்தடுக்க ஒவ்வொருவரும்முயற்சித்தல் அவசியமென ஜேர்மனிய மேற்றிராணிமார்கள் அனைவரும்கூட்டாக வெளியிட்டிருக்கும் தபசுகாலநிருபம் கூறுகிறது. கடந்த 3வருடங்களாகத் தபசுகாலத்தில்வரும் ஒருஞாயிற்றுக்கிழமையில் பசியாலும், பஞ்சத்தாலும் மரிப்போரைஇரட்சிக்க நிதிசேகரிக்கும் பணியை மேற்படி மேற்றிராணிமார் சங்கம் மேற்கொண்டுவருகின்றது. கடந்த வருடங்களில் இந்நிதிக்காக 7கோடியே 80இலட்சம் ரூபாய்கள் ஜேர்மனிய தேசத்தில் சேர்க்கப்பட்டன. இந்தநிதியினால் 41விவசாயகலாசாலைகள் தொடங்கப்பட்டன. 90மருத்துவமனைகளும், 16தாதிமார் பயிற்சிக்கூடங்களும நிர்வகிக்கப்பட்டு வருகின்றன. ஆயிரக்கணக்கான குஷ்டரோகர்களும் இந்நிதியால் பயனடைந்தனர்.

* * *

## வத்திக்கான் வானொலி மாஸ்கோவுக்குப் பதிலளிக்கிறது

அண்மையில் மாஸ்கோரேடியோ தனது வெளிநாட்டுஒலிபரப்பில் கொங்கோலியப்பிரதமர் பற்றிஸ் லூமும்பாவின்கொலைக்குக் கத்தோலிக்க திருச்சபையே முழுப் பொறுப்புமுடையதெனக் குற்றஞ்சாட்டியது கொங்கோவிலுள்ள கத்தோலிக்கதிருச்சபை நாட்டின் பொருளாதாரத்தையும், மக்களின் நன்மையையும் கவனியாமல் தன்சொந்த அபிவிர்த்தியையே கவனித்து வருகிறதெனவும் அவ்வொலிபரப்பில் கூறப்பட்டது.

வத்திக்கான்வானொலி அண்மையில் இதற்குப் பதிலளிக்குமுகமாக வெளியிட்ட அறிக்கையொன்றில் மாஸ்கோரேடியோவின் ஒலிபரப்புமுழுவதும் அபத்தமானதெனவும், ஆதாரமற்றதெனவும் கூறியிருக்கிறது. கத்தோலிக்கதிருச்சபை அடக்குமுறைகளையும், படுகொலைகளையும், பயங்காவெறியாட்டத்தையும் எப்போதுமே கண்டித்துவருகிறது. கொங்கோவிலுள்ள கத்தோலிக்ககுருக்களும், கன்னியர்களும் மேற்படிதேசத்தின் நல்வாழ்வுக்கும் பின்தங்கியோரின் நலவுரிமைகளைக் கவனிப்பதிலும் ஏராளமானபணியை மேற்கொண்டிருந்தனர். ஆயின் கொங்கோவில்ஏற்பட்ட பயங்கரக் கலகங்களின்போது கத்தோலிக்க திருச்சபையே மனுக்கன்மையற்றவிதமாகத் தாக்கப்பட்டது. பலகத்தோலிக்ககுருக்களும், கன்னியர்களும் அநியாயமாகக் கொல்லப்பட்டனர், அல்லது நாடுகடத்தப்பட்டனர்.

கத்தோலிக்கதிருச்சபை இவ்வித வேதகலாபனைகளை எதிர்நோக்குவது இதுவே முதன்முறையல்ல. திருச்சபை உண்டானகாலந்தொட்டே இவ்வித எதிர்ப்புச்சக்திகள் அடிக்கடி திருச்சபையைத் தாக்கிக்கொண்டிருக்கின்றன என வத்திக்கான்வானொலி மேலும் கூறியது.

# சிலுவையிலேமகிமை..

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

துக்குத் தகுந்த பரிகாரம் செலுத்தியதுமல்லாமல் உலகமக்கள் உயிர்வாழ உன்னத வரப்பிரசாதங்களையும் அடைந்துள்ளார். "கோதுமை மணி நிலத்திலே வீழ்ந்து மடியாவிட்டால் அது தனியேகிடக்கும். அது மடிந்ததானால் மிகுந்த பலனைத்தரும்" (அரு. 12 : 24) என்று அவர் கூறியது தமது பாடுகளின் பெறுபேறுகளைக் குறித்துத்தான். "நானோ, மனிதர் சீவனை அடையும் பொருட்டும் அதை மென்மேலும் ஏராளமாய் அடையும் பொருட்டுமே வந்தேன்" (அரு. 10 : 10). இதை அர்ச். சின்னப்பர், "ஒரே மனிதனுடைய (ஆதாமுடைய) கீழ்ப்படியாமையினாலே அநேகர் பாவிகளாக்கப்பட்டதுபோல ஒரே ஒருவருடைய (கிறிஸ்துநாதருடைய) கீழ்ப்படிதலினாலே (சிலுவை மரணத்தினாலே) அநேகர் நீதிமான்களாக்கப்படுவார்கள்" (உரோ. 5 : 19) என்று விளக்குகின்றார்.

அன்பெனும்திறவுகோலின்றிக் கிறிஸ்துநாதருடைய சீவியத்தையும், மரணத்தையும் ஒருபோதும் புரிந்துகொள்ள முடியாது. அவர் மனிதாவதாரம் எடுத்ததற்கு அன்பே ஏக காரணமாயிருந்தது. "அவர் உலகத்தில் பிரவேசிக்கும்போது சொல்லுகிறதாவது: நீர் பலியையும், நைவேத்தியத்தையும் விரும்பவில்லை. எனக்கொரு சரீரத்தைப்பொருத்தினீர். பாவத்துக்குப்பரிகாரமாகத் தகனப்பலிகள் உமக்குப் பிரியப்படவில்லை. அப்பொழுது ... ... சருவேசுரா! உம்முடைய சித்தத்தின்படியே செய்ய இதோ வருகிறேன் என்று சொன்னேன்" (எபி. 10 : 5—7).

அன்புருவாய் அவதரித்த கிறிஸ்துபெருமான் மனுக்குலத்தின்மீதுவைத்த மட்டற்ற அன்பினாலேயே கொடிய வேதனைகளுக்கும் சிலுவை மரணத்திற்கும் தம்மைக் கையளித்தார். அவர் தேவனாயிருந்தபடியால் உலக இரட்சணியத்துக்கு அவருடைய அகோர வேதனைகளும், மரணமும் அவசியமாயிருக்கவில்லை. அவர் சிந்திய இரத்தத்தின் அல்லது கண்ணீரின் ஒரு துளிமட்டுமே உலகம் முழுவதின் ஈடேற்றத்திற்குப் போதியதும், மேலதிகமானதுமாய் இருந்திருக்கும். ஆனால், அவர் அளவற்ற அன்பின் நிமித்தம் கொடூர வேதனைகளையும் சிலுவை மரணத்தையும் கையேற்றார். "ஒருவன் தன்சிநேகிதர்களுக்காகத் தன்பிராணனைக் கொடுக்கிறதைவிட அதிகமான சிநேகம் எவனிடத்திலும் இல்லை" (அரு. 15: 13). "நீதிமானுக்காக ஒருவன் மரிக்கிறதே அரிது; ஆகிலும் நல்லவனுக்காக ஒருவேளை ஒருவன் மரிக்கத்துணியலாம். ஆனால், நாம் இன்னும் பாவிகளாய் இருக்கும்போதே குறிக்கப்பட்டகாலத்தில் நமக்காகக்கிறீஸ்துநாதர் மரித்ததினாலே சர்வேசுரன் நமதுபேரில் வைத்திருக்கிற அன்பை அவர் விளங்கப்பண்ணினார்" (உரோ 5 : 7-8). இதிலும் பார்க்க மேலான அன்பு உண்டா?

இத்தகைய பேரன்புக்கு நாம் பதிலன்பு காட்டவேண்டாமா? நம்அன்பைக் காட்டுவதற்கு முந்த முந்த நாம் கிறீஸ்துநாதருண்டய சிலுவையிலேயே மகிமைபாராட்டவேண்டும். ஏனெனில், கிறீஸ்துநாதருடைய சிலுவையிலிருந்து சகல வரப்பிரசாதங்களும் நமக்கு வருகின்றன. "நீங்கள் மாசுமறையற்ற ஆட்டுக்குட்டிக்கொப்பாகிய கிறீஸ்துநாதருடைய விலையேறப்பெற்ற இரத்தத்தினால் இரட்சிக்கப்பட்டிருக்கிறீர்கள்" (1 இரா 1: 19) என்று அர்ச். இராயப்பர் நினைவூட்டுகின்றார். அடுத்ததாக அர்ச். சின்னப்பர் கூறுவதுபோல் கிறீஸ்துநாதருக்குச் சொந்தமானவர்கள் தங்கள் மாமிசத்தை அதன் துர்க்குணங்களோடும், இச்சைகளோடும் சிலுவையில் அறைந்தவர்களாய்ச் சீவிக்கவேண்டும் (கலா 5 : 24). இன்னும் உலகம் அவர்களுக்குச் சிலுவையில் அறையுண்டதாயும், அவர்கள் உலகத்துக்குச் சிலுவையில் அறையுண்டவர்களாகவும் வாழவேண்டும் (கலா. 6 : 14). கிறிஸ்துநாதரோடு கூடச் சிலுவையிலே அறையப்பட்டவர்களாய் நாம் சீவித்தால்தான் அவருடைய சீவியம் நம்மில்நிலைத்து நிற்கும். "கிறிஸ்துநாதரோடு கூடச் சிலுவையில்அறையப்பட்டவனாய் இருக்கிறேன். நான் சீவிக்கிறேன்; ஆனாலும் நானல்ல, கிறிஸ்துநாதர்தாமே என்னில் சீவிக்கிறார் ஏனெனில், நான் இப்போது சரீரத்தில் சீவிக்கிறதாவது என்னைச் சிநேகித்து எனக்காகத் தம்மைத்தாமே ஒப்புக்கொடுத்த தேவசுதனைப் பற்றும் விசுவாசத்தினாலேயாம்" (கலா. 2: 19: 20). இப்பரித்தியாக வாழ்வுக்கு அவருடைய திருப்பாடுகளே எமக்குச் சிறந்த எடுத்துக்காட்டாகவும் விளங்குகின்றது. "கிறிஸ்துநாதர் நமக்காகப் பாடுபட்டுத் தம்முடைய அடித்தளங்களை நாங்கள் பின்பற்றும்படியாக நமக்கு மாதிரி வைத்துவிட்டுப் போயிருக்கிறார்" (1 இரா. 2: 21). பரித்தியாக வாழ்வு கிறிஸ்துநாதருடன்நம்மை ஐக்கியப்படுத்தி அவருடையவெற்றியிலும் பங்கடையச் செய்கின்றது. "இது சத்தியவாக்கு. என்னவென்றால்: நாம் அவருடனே கூட மரித்தோமானால் அவருடனே கூட உயிர் வாழ்வோம். அவரோடு கூடப் பாடுபட்டால் அவரோடு கூட அரசாளுவோம்" (2 திமோ. 2 : 11—12).

Printed and Published for the Proprietor by NICHOLAS JAMES, residing at No. 20, Fifth Cross Street, Jaffna, at St. Joseph's Catholic Press, Catholic Mission Premises, Main Street, Jaffna, on Saturday March 25-1961

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org